
# சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை

## - அரிய சம்பவங்கள்



மாணவர்களுக்கான வெளியீடு

# சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை அரிய சம்பவங்கள்

## விவேகானந்தப் பாறை நினைவுச் சின்னம் மற்றும் விவேகானந்த கேந்திரம் இருபதாம் ஆண்டு விழா - 1983



ஆங்கில மூலம்
கே.பி. சிவகுமார், எம்.ஏ.,

தமிழாக்கம்
பேராசிரியர் இரா. அண்ணாமலை, எம்.ஏ.,பிடி., எம்.லிட்.,
மற்றும்
மலர்மன்னன்

ஓவியம்
டி. பாஸ்கரதாஸ்

பதிப்பாளர்:
விவேகானந்த கேந்திர பிரகாஷன் டிரஸ்ட்
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
போன்–8520042

விவேகானந்த கேந்திர பிரகாஷன் டிரஸ்ட், சென்னை.

ஒன்பதாம் பதிப்பு – 1999

விலை ரூபாய் 15 /-

அச்சிட்டோர்-
ஹைடெக் ஆப்செட் (பி) லிமிடெட். சென்னை – 600 014, தொலைபேசி : 8546681.

## அணிந்துரை

கல்வி என்பது மூளையில் பலவற்றைத் திணிப்பது மட்டுமல்ல; மாறாக, மனத்திற்கும், குண நடத்தைக்கும் அளிக்கப்பெறும் பயிற்சியே என்பது சுவாமி விவேகானந்தரின் கருத்தாகும். அவருடைய சொந்த சொற்களிலேயே கூறுவதானால், 'மனிதனை உருவாக்கல், குண நடத்தையை உருவாக்கல், கருத்துச் செறிவினை இணைய வைத்தல்', மனிதனிடம் ஏற்கனவே பதிந்துள்ள பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி.

பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு அத்தகைய கல்வியை அளிப்பதற்குத் தேவையான பொருத்தமான நூல்கள் போதுமானவையாக இல்லை. வாழையடிவாழையாக வரும் பண்பாட்டுப் பின்னணியுடன் கூடிய சீரிய குழந்தைகள் நம்மிடையே இலட்சக்கணக்கில் உள்ளனர். புடம்போட்டு எடுக்கப்பெற்ற தங்கள் பண்பாட்டு வாழ்க்கை மூலங்களைத் தாமே கண்டறிந்து ஊக்கம் பெறுவதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு அளிக்கப்படுமேயானால், நவீன விஞ்ஞான உணர்வினையும் இயல்பினையும் நன்கறிந்து அவற்றைத் தங்கள் இயல்போடு இரண்டறக் கலக்கச் செய்வதற்கும், மேலை கீழை நாட்டு ஒருங்கிணைந்த குணநலனைப் பேணிக் காக்கவும் தேவையான திறனை அவர்கள் பெற முடியும். இத்தகைய தன்மையைத்தான் விவேகானந்தர் அடைந்திருந்தார்; நவீன காலத்தில் நமது குழந்தைகள் இதே தன்மையைப் பெற வேண்டும் எனவும் அவர் விரும்பினார். அதன் மூலம், பாரதத்திருநாட்டின் தீராப் பிரச்சனைகளான வறுமை, அறியாமை, ஆதரவற்ற உணர்வு ஆகியவற்றிற்குப் பரிகாரம் காணவும், பாரத நாட்டிற்குள்ளும், வெளியிலும் வாழும் மக்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டு நல்லுறவுப் பாலங்களை அமைப்பதற்கும் தகுதி வாய்ந்தவர்களாக அவர்கள் உருவாக இயலும்.

கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரம் வெளியிட்டுள்ள **சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை - அரிய சம்பவங்கள்** என்னும் இச்சிறு நூல் நமது குழந்தைகளின் கல்வி போதனையின் இன்றைய அவசர அவசிய தேவையைப் பூர்த்தி செய்யும் முறையில் அமைந்துள்ளது. நீண்ட காலத்திற்கு முன்னர் இம்மாதிரியான நூல்கள் படிக்கக் கிடைப்பதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே இருந்த அந்த நாட்களில் உயர்நிலைப் பள்ளி மாணவனாக நான் இருந்த போதே விவேகானந்தர் பற்றிய நூல்கள் இளைஞர்களுக்கு எத்தகைய பேரார்வத்தை அளிக்குமென்பதை அனுபவ பூர்வமாக அறிந்திருந்தேன். "நீங்களே கற்றுக் கொள்ளுங்கள்; ஒவ்வொருவனின் உண்மையான இயல்பு இன்னதென்று கற்பியுங்கள்; உள்ளே உறங்கிக் கிடக்கும் உயிர்த்துடிப்பைக் கூவி அழையுங்கள்; அது எங்ஙனம் விழித்துக் கொள்கிறது என்பதை நீங்களே கண்டு உணர்வீர்கள். உறங்கிக் கிடக்கும் உயிர்த்துடிப்பு தன் உணர்வினைப் பெற்று இயங்குமாறு தட்டியெழுப்பப் பெறுமானால் ஆற்றலும், பெருமையும், தூய்மையும், நற்பண்பும் தாமே வரும், மகத்தானவையும், புகழ் வாய்ந்ததுமான யாவுமே தாமே வந்தெய்தும்", என்று சென்னையில் நிகழ்த்திய சொற்பொழிவொன்றில் அவர் நம்மைத் தூண்டுகிறார்.

நம் குழந்தைகள் பொருள் பொதிந்த வாழ்வினை வாழ்ந்து காட்டவும், மனிதனுள் உறையும் இறைவனுக்கு ஆற்றும் பணியில் மகிழ்ச்சியும், மனநிறைவும் பெறவும் இந்நூல் ஊக்குவிப்பதாகுக.

*இராமகிருஷ்ண மடம், ஹைதராபாத்* **சுவாமி ரங்கநாதானந்தா**
*1983 மார்ச் மாதம் 16ஆம் நாள்.*

*ஆங்கில மூலத்திற்கு எழுதப்பட்ட அணிந்துரையின் தமிழாக்கம்.*

ம.பொ. சிவஞானம்
தலைவர்
தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை–600 009

தேதி: 6–7–1983

அன்புடையீர்,

"சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை – அரிய சம்பவங்கள்" எனும் சிறப்பான இலக்கிய நூலைப் படித்து இன்புற்றேன். விவேகானந்தரிடம் எனக்குப் பெரு மதிப்பு உண்டு. எனக்கு என்ன, தேச பக்தியுள்ள ஒவ்வொரு இந்தியனுக்கும் இந்த மகானிடம் மதிப்பு இருந்தாக வேண்டும். இந்து கலாச்சாரத்தை இந்திய கலாச்சாரமாக மாற்றிய பெருமையிலே, சுவாமி விவேகானந்தருக்கு பெருமதிப்பு உண்டல்லவா !

விவேகானந்தருக்கு பாரதத்தின் தென் கோடியிலுள்ள கன்னியாகுமரி கடலிலே ஒரு நினைவுச் சின்னத்தை நிறுவ, விவேகானந்த கேந்திரம் எடுத்த பெரு முயற்சியை நான் அறிவேன். இந்த நினைவுச்சின்னத்திற்கு முதன் முதலில் அடிக்கல் நாட்டியவன் நான் என்பதை நினைக்கும் போதெல்லாம் என் இதயம் பெருமிதம் அடைகிறது. எத்தனையோ இடையூறுகளுக்கிடையே, அந்தப் பணியை நான் மேற்கொள்ள வேண்டியிருந்ததால், அது என் மனதிலிருந்து மறையவில்லை.

சுவாமி விவேகானந்தபாறை நினைவுச் சின்னக் குழுவிலே நான் உறுப்பினனாக இருந்ததும் எனக்கு நினைவு இருக்கிறது. அந்த குழுவிற்கு 20 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது என்று அறிகிறேன். அத்துடன் விவேகானந்த கேந்திரம் நிறுவப்பட்டும் 10 ஆண்டுகள் நிறைவு பெறுவதாக அறிகிறேன். இந்த நல்ல நேரத்திலே, விவேகானந்த பாறை நினைவுச் சின்னத்தின் நாயகனான நரேந்திரநாதரின் வரலாற்றை வெளியிடுவது சாலச் சிறந்த பணியாகும்.

இந்நூல் அளவில் சிறியதாயினும், மதிப்பில் பெரியது. நல்ல உணர்ச்சிமிக்க தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. வார்த்தைகள் நெஞ்சைத் தொடுகின்றன. செய்திகளைப் படிக்கும் போது, மெய் சிலிர்க்கின்றது. இந்த நூலை முதலில் ஆங்கிலத்தில் எழுதிய திரு.கே.பி. சிவகுமார் அவர்களுக்கும், தமிழாக்கம் செய்த பேராசிரியர் திரு. இரா. அண்ணாமலை அவர்களுக்கும், அவர்களுக்குத் துணை நின்ற மலர் மன்னனுக்கும் என் மனமுவந்த வாழ்த்துக்கள்.

அன்புள்ள,
ம.பொ. சிவஞானம்

## பதிப்பாளர் குறிப்புகள்

1983ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தப் பாறை நினைவுச் சின்னக்குழுவின் இருபதாம் ஆண்டு நிறைவு பெற்றது. தொடர்ந்து விவேகானந்த கேந்திரமும் இயங்கி வருகின்றது. இதனைக் கொண்டாடும் வாயிலாக, சுவாமி விவேகானந்தரின் சீரிய செய்தியைப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவரிடையே பரப்பும் நோக்குடன் பல்வேறு போட்டிகளை நடத்திப் புதியதொரு விழிப்புணர்ச்சியை உருவாக்க விவேகானந்த பாறை நினைவுச் சின்னம் மற்றும் விவேகானந்த கேந்திர இருபதாம் ஆண்டு நிறைவு விழாக் குழு இச்சிறு நூலை உங்கள் முன் படைத்துப் பெருமிதம் கொள்கிறது.

இந்நூலினை ஆங்கிலத்தில் வடித்துக் கொடுத்த ஸ்ரீ கே.பி.சிவகுமார் அவர்கள் நம் பாராட்டுக்குரியவர். ஸ்ரீ பாஸ்கரதாஸ் இந்நூலுக்கான ஓவியங்களை அழகுறத் தீட்டிக் கொடுத்துள்ளார். ஆங்கில மூலத்தைக் குழந்தைகளுக்குப் புரியும்படி தமிழாக்கம் செய்த பேராசிரியர் இரா. அண்ணாமலை அவர்களையும், மலர்மன்னன் அவர்களையும் பாராட்டுகிறோம். தமிழ் எழுத்துக்களை அச்சுக்கோத்தும், ஆஃப்செட் முறையில் அச்சிட்டும் கொடுத்த ஹைடெக் ஆஃப்செட் (பி) லிமிடெட், எங்கள் பாராட்டுக்குரியவர்கள். மேற்கூறிய அனைவருக்கும் எங்கள் நன்றி கலந்த வணக்கம்.

சுவாமி ரங்கநாதானந்தா அவர்கள் ஆங்கில மூலத்திற்கு அழகானதோர் அணிந்துரை அளித்துள்ளார்கள். அவர்களுக்கும் எங்கள் நன்றி கலந்த வணக்கம்.

தமிழகச் சட்டமன்ற மேலவைத் தலைவர் காலம் சென்ற டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார்கள். விவேகானந்தப்பாறை நினைவுச்சின்னம் உருவான நாளிலிருந்து நம் கேந்திரத்திற்கு உறுதுணையாக இருந்த, ஐயா அவர்களுக்கும் எங்கள் நன்றி கலந்த வணக்கம்.

பாரதத் திருநாட்டின் பழம் பெருமை, அதன் தத்துவ ஞானம், பாரம்பரியம் ஆகியவற்றை சுவாமி விவேகானந்தர் உலகெங்கும் பறை சாற்றினார். இச் சிறு நூல் இளம் உள்ளங்களில் சுவாமிஜி சுட்டியவாறு தேசபக்தி, தெய்வபக்தி, ஆன்மநேய ஒருமைப்பாடு, தூயதொண்டுள்ளம் ஆகியவற்றைத் தோற்றுவிக்க உதவுமாயின் அதுவே விவேகானந்த கேந்திரத்திற்கு நீங்கள் தரும் பரிசு எனக் கொள்ளுகிறோம்.

என்றும் தாய்நாட்டுப் பணியில்

சென்னை　　　　உங்கள்

14-04-99　　　　பதிப்பாளர்

## அத்தியாயம் ஒன்று

உலகில் எத்தனையோ தலைசிறந்த ஆண்மக்களும் பெண்மக்களும் பிறந்துள்ளார்கள். வீரதீர பராக்கிரமத்திற்கும் வெற்றிகளுக்கும் பெயர் பெற்ற அரசர்களும், மாமன்னர்களும் பிறந்திருக்கிறார்கள். சிந்தனைச் சிற்பிகளும் விஞ்ஞான மேதைகளும் தோன்றியுள்ளார்கள். நாகரிக நல்வாழ்வுக்கு வழிகாட்டிய ஞானிகளும், துறவிகளும் இம்மண்ணில் அவதரித்துள்ளார்கள். அவ்வப்போது சீரிய சமூக சீர்திருத்தவாதிகளும் தோன்றியிருக்கிறார்கள். இத்தகைய சான்றோர்கள் சமுதாயத்தை நல்வழிப்படுத்த கொடுமைகளை எதிர்த்துப் போராடித் தங்கள் இன்னுயிரைப் பணயம் வைத்துள்ளார்கள். சமூகத்தைப் பிடித்துள்ள கொடுமையானதும் காலத்திற்கு ஒவ்வாததுமான கண்மூடிப் பழக்க வழக்கங்களை மண்மூடிப் போகச் செய்ய அவர்கள் முன்னின்று பாடுபட்டுள்ளார்கள். நமது தாய்நாடான பாரதமும் அவ்வப்போது அத்தகைய வீரர்களையும் வீராங்கனைகளையும் பெற்றெடுத்துப் பெயர் பெற்றுள்ளது. நம் பாரதத்தாய் ஈன்றெடுத்த தவப்புதல்வர்களில் ஒருவர்தான் சுவாமி விவேகானந்தர். நம் தாய்நாட்டின் வரலாற்றில் ஒரு பொன்னேடாக அவர்தம் வாழ்வும் வாக்கும் திகழ்கின்றன. நவபாரதத்திற்கு அவர் புது வாழ்வினை நல்கினார் எனில் அஃது மிகையாகாது.

### நரேன் பிறந்தான்

சுவாமி விவேகானந்தரின் பிள்ளைப் பிராயத்துப் பெயர் வீரேசுவரர் அல்லது நரேந்திரநாத தத்தா என்பதாம். 1863 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் நாள் பொங்கல் திருநாளாம் மகர சங்கராந்தியன்று கல்கத்தா மாநகரில் நரேந்திரநாதர் பிறந்தார்.

அவருடைய தந்தையாரான விசுவநாத தத்தா புகழ் பெற்ற வழக்கறிஞர். அவருடைய தாயாரான புவனேசுவரி அம்மையார் தூய்மைக்கும், ஆசாரத்திற்கும் பெயர் பெற்ற தலைசிறந்த சிவபக்தையாவார். அந்த அம்மையார் ஒரு நாள் பவித்திரமான கனவொன்றினைக் கண்டார். பரம் பொருள் சிவபெருமானே தமக்குக் குழந்தையாக வந்து பிறப்பார் என்பதே அவர் கண்ட கனவாகும். பின்னர் அவருக்குக் குழந்தை பிறந்த போது, அந்தத் தாய் அக்குழவிக்கு வீரேசுவரர் என்ற அன்புப் பெயரிட்டு அழைத்தார். அவனை பிலே என்ற செல்லப் பெயராலும் அழைத்தனர்.

## அத்தியாயம் இரண்டு

### விந்தையான குழந்தை வீரேசுவரன்

நரேன் தம் பெற்றோர்களிடம் அளவுகடந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தான். தாயின் மீது அவனுக்கிருந்த பற்றோ ஆழமானது; கட்டுக்கடங்காதது. வீட்டில் மட்டுமல்லாது சமூகத்திலும் தன் தாயாருக்குத் தலைசிறந்த மதிப்பும் மரியாதையும் கிட்ட வேண்டுமென்று அவன் விழைந்தான். இதிகாசங்களிலிருந்து அவன் தாய் அவனுக்குக் கதைகளைக் கூறுவாள். குறிப்பாக இராமாயணம், மகாபாரதக் கதைகளை அந்த அன்புக்குரிய தாய் அவனுக்குச் சொல்வது வழக்கம். உணர்வூட்டும் அக்கதைகள் இளம் நரேனின் உள்ளத்தில் பெருமிதமான குணப்பண்புகளையும், உயரிய இலட்சியங்களையும் ஊன்றிய நல்வித்துக்களாயின; வருங்காலத்தில் வாழ்வில் அக்குணங்கள் குடிகொண்டன.

### ஈகைக் குணம்

ஈயென இரந்தோர்க்கு இருப்பதைக் கொடுக்கும் பழக்கம் பிலேயிடம் இயல்பாகக் குடிகொண்டிருந்தது. இரவலர்களிடமும், அலைந்து திரியும் ஆண்டிப் பண்டாரங்களிடமும் அவனுக்குத் தனியானதோர் ஈடுபாடுண்டு. ஒரு தடவை புத்தாடையொன்றை இரவலரான ஓர் ஆண்டிப் பண்டாரத்திற்கு அவன் கொடுக்க,

கொடுத்ததைக் கண்ணுற்றோர் திகைப்படைந்தனர். அவர்கள் ஆண்டிப் பண்டாரத்தைக் கடிந்து கொண்டனர். அப்போது பிலேக்கு நான்கு வயதே நிரம்பியிருந்தது. அவன் உடனே ஆண்டிப் பண்டாரத்திற்காகப் பரிந்து கொண்டு, "எதற்காக அவரை கடிந்து கொள்கிறீர்கள்? பிச்சை பெறுவது அவருடைய உரிமை; இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவுவது நம் கடமையன்றோ!" என்று பதில் கொடுத்தான். பிச்சைக் காரர்களுக்கும், இரவலர்களுக்கும் கையில் கிடைத்ததை மிகத் தாராளமாகக் கொடுக்கும் பிலேயைக் கட்டுப்படுத்த எண்ணி அவனுடைய




பெற்றோர்கள் பலமுறை அவனை அறையில் பூட்டி வைத்த சமய சந்தர்ப்பங்களும் உண்டு. அடைபட்டு நிற்கும் அத்தகைய வேளையிலும் தன் கைக்குக் கிட்டிய பொருள்களையெல்லாம் சாளரத்தின் வழியாக அவன் வறியோர்க்குக் கொடுத்துவிடுவான்.

## சிறுகுறும்பும், சீரிய மனப்போக்கும்

சிறு பையனான பிலே குறும்புக்காரன்; எதையும் விளையாட்டாக கருதும் இயல்பினன். அவனுடைய சிறுகுறும்புகளும், நையாண்டித் தொல்லைகளும் அத்துமீறிப் போவதுண்டு. அவைகளை அவன் தாயாராலேயே சகித்துக்கொள்ள முடியாத தருணங்களும் வந்ததுண்டு. அத்தகைய தருணங்களில் அவனைக் கட்டுப்படுத்த அந்த அம்மையார் அருமையான வழியொன்றைக் கடைப்பிடித்தார். பிலேயின் சிறுகுறும்பும் தொல்லைகளும் அளவு கடந்து போகும் வேளைகளில், குளிர்ந்த தண்ணீரைக் குடம் குடமாக அவன் தலையில் கொட்டி "சிவ சிவா" என்று உச்சரிப்பார் அந்தத் தாய். வியக்கத்தக்க விதத்தில் உடனே பிலே பெட்டிப் பாம்பு போல் அடங்கி விடுவான். பிலே அசாதாரணமானவன் என்பதை சிறு பையனாக இருந்த காலத்தில் நிகழ்ந்த மேலும் சில நிகழ்ச்சிகளால் உணரலாம்.


## நரபூபதியாக நரேன்

அரசனும், அரச சபையும் என்னும் விளையாட்டை நரேன் அடிக்கடி விளையாடி அகம் மிக மகிழ்வதுண்டு. ஒவ்வொரு முறையும் அவன்தான் அரசனாக நடிப்பான். மற்ற பிள்ளைகள் அமைச்சர்களாகவும், அதிகாரிகளாகவும் இருப்பார்கள். பிலே சிறு பையனாக, இருந்தபோதிலும், அரசனாக நடிக்கும் போது அரசனுக்குரிய பெருமித உணர்வினைத் தத்ருபமாகக் கடைப்பிடிப்பதில் கண்டிப்பாக இருப்பான். விளையாட்டு முடிந்ததும், மற்ற குழந்தைகளின் உற்ற தோழனாக அவன் மாறி விடுவான்.




## நரேனும் நல்லபாம்பும்

ஒருவகையில் நரேனைப் பிறவி யோகியாகக் கருத வேண்டும். தியானம் செய்வதில் அவன் வல்லவனாக இருந்தான். சிந்தனையை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் அவனிடம் அளவுகடந்திருந்தது. ஒருநாள் நரேன் தியானத்தில் ஆழ்ந்திருந்தான். அப்போது நல்ல பாம்பு ஒன்று வெளிப்பட்டது. அந்நல்லபாம்பு நரேனின் உடல்மீதேறி மறுபுறமாக இறங்கிச் சென்றது. அவனுடைய இளம் நண்பர்களுக்கு அந்நிகழ்ச்சி, அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஊட்டியது. பாதுகாப்பான தொலைவுக்கு ஓடிச்சென்று திகைப்பையும், பீதியையும் ஊட்டும் காட்சியை அவர்கள் கண்டு வியந்தார்கள். ஆனால் நரேனுக்கு




அதுபற்றி ஒன்றும் தெரியாது. நல்லபாம்பு தன் உடல் மீதேறி ஊர்ந்து நெளிந்ததைப் பொருட்படுத்தாத அளவிற்கு அவனுடைய சிந்தனையை ஒருமுகப்படுத்தும் தியானம் அமைந்திருந்தது.

## மரத்துப் பேயை மதியாத நரேன்

பொதுவாக, குழந்தைகள் எளிதில் திகிலடைந்து விடுவர். சில வேளைகளில் அவர்களைக் கட்டுப்படுத்தி வைப்பதற்காக, பெரியோர்கள் பேய் பிசாசு என்று அச்சுறுத்துவதுண்டு. நரேன் நெஞ்சுறுதியும் கூர்ந்த மதியையும் கொண்டவன். அவனிடம் இதுபோன்ற தந்திரம் பலிக்குமா என்ன?

பெரியதொரு மரம். நரேனும் அவனுடைய நண்பர்களும் அந்த மரத்திலேறி கிளைக்குக் கிளை தாவி முரட்டுத்தனமாக விளையாடுவது வழக்கம். குழந்தைகளின் கும்மாளத்தால் அலுத்துப்

போனார் மரத்துச் சொந்தக்காரர். அவர்களை அச்சுறுத்தி தம் தொல்லைகளுக்கு முற்றுபுள்ளி வைக்க அவர் முடிவு செய்தார். ஒருநாள் விளையாட்டில் மூழ்கியிருந்த அவர்களிடம் சென்று, ''இதோ பாருங்கள்! இந்த மரத்தில் பேய் ஒன்று குடியிருக்கிறது. நீங்கள் இந்த




இடத்தை விட்டு ஓடி விடுங்கள்; இல்லையேல் பேய் வந்து உங்களைக் கடித்து விழுங்கி விடும்'' என்று எச்சரித்தார். நரேனைத் தவிர மற்ற எல்லாக் குழந்தைகளும் நடுநடுங்கிப்போய் அங்கிருந்து நழுவத் தொடங்கி விட்டனர். நரேன் மட்டும் நிலைகுலையாமல் கல்லுப்பிள்ளையார் போல் அப்படியே நின்றிருந்தான். பேய் பிசாசுகளை எண்ணி அஞ்சுவதற்கு மாறாக, நரேனுக்குப் பேயைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் அதிகப்பட்டது. அவன் முன்பைக் காட்டிலும் தீராத விளையாட்டுப் பிள்ளையாக மாறினான். மரக்கிளைகளில் தாவித் தாவி ஊஞ்சலாடி, பேய் வரும்! பேய் வரும்! என்று அதனைச் சந்திக்கத் தயாரானான். என்னே ஏமாற்றம்!



4

பேயோ, குட்டிச்சாத்தானோ எதுவும் மரத்திலிருந்து வெளிப்படவில்லை. மரத்துச் சொந்தக்காரர் தங்களை அச்சுறுத்தி விரட்டியடிக்கவே அத்தகைய கதையை கட்டியிருக்கிறார் என்பது நரேனுக்கு தெளிவாக விளங்கியது. பின்னர் அவன் தம் நண்பர்களையெல்லாம் கூட்டி, அத்தகைய குருட்டு நம்பிக்கைகளையெல்லாம் ஒரு போதும் நம்பக்கூடாது என்று அறிவுறுத்தினான்.

இயல்பாகவே நரேன் அச்சமற்றவனாகவும், எதையும் துருவி ஆராயும் குணமுடையவனாகவும் இருந்தான். எதனைப்பற்றிய உண்மையையும் கண்டறிய எத்தகைய சோதனையையும் எதிர்கொள்ளும் நெஞ்சுறுதி அவனிடம் இருந்தது. உண்மையைக் கண்டறிவதில் அவனுக்கிருந்த ஆர்வத்தை பிறிதொரு நிகழ்ச்சியின் மூலம் அறியலாம்.

## சாதி உணர்வினைத் தகர்த்தெறிந்த ஹூக்கா சம்பவம்

நரேனுடைய தந்தை விசுவநாதர் சுறுசுறுப்பான வழக்குரைஞர். அவருக்குப் பல கட்சிக்காரர்கள் உண்டு. கட்சிக்காரர்கள் பல்வேறு சாதிகளையும், சம்பிரதாயங்களையும் சார்ந்தவர்கள். கட்சிக்காரர்கள் பயன்படுத்துவதற் கென்று அவருடைய பங்களாவில் பலவகை ஹூக்காக்களை அவர் ஆயத்தமாக வைத்திருந்தார். வடபாரதத்தில் குடுவையில் சேர்ந்த குழாய் வழியாக புகைபிடிப்பது வழக்கம். இக்குடுவைக் குழாயைத்தான் ஹூக்கா என்பர். கட்சிக்காரர் ஒவ்வொருவரும் தத்தம் சாதிக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்ட ஹூக்காவைத் தான் பயன்படுத்த வேண்டுமென்ற நியதியைக் கடைப்பிடித்து வந்த காலமது. ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு ஹூக்கா என்னும் வழக்கத்தைப் பார்த்த நரேன் வியப்பிலாழ்ந்தான். ஒரு ஹூக்காவிற்கும் மற்றொரு ஹூக்காவுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை கண்டறிய வேண்டுமென அவன் விரும்பினான்.


எனவே ஒரு நாள் அவன் ஒவ்வொரு ஹுக்காவிலும் வாய்வைத்து அவற்றில் தென்படும் வேறுபாட்டைக் காண உறிஞ்சிப் பார்த்தான். அவற்றுக்குள்ளே எவ்வித வேறுபாட்டையும் அவனால் கண்டுணர இயலவில்லை. இவ்வாறாக, தன் சுயதர்க்க ஞானத்தின் அடிப்படையிலும் தெளிந்த பொது அறிவின் மூலமாகவும், சாதிகளுக்கிடையே வேற்றுமை இருப்பதாகக் கருதப்படும் கொள்கை அர்த்தமற்றது என்ற முடிவுக்கு அவன் வந்தான்.




நரேன் ஒவ்வொரு ஹுக்காவையும் உறிஞ்சி சோதிப்பதைக் கண்ணுற்ற ஒருவர், எதற்காக இப்படி எல்லா ஹுக்காவிலும் வாயை வைக்கிறாய் என்று கிண்டலாகக் கேட்டார். "ஹோ! அதுவா! வேறொன்றுமில்லை! சாதிக் கட்டுப்பாடுகளை மீறுவதால் என்னதான் நேரிடும் என்று பார்க்கிறேன்" என்று நரேன் பதிலடி கொடுத்தான்.

## பறக்கும் பரியும் பதட்டமுற்ற பாவையும்

நெருக்கடியான சூழ்நிலையில் பெரும்பாலான மக்கள் மனஞ்சோராமையை இழந்துவிடுவது இயல்பாகும். உரிய செயலை உரிய நேரத்தில் செய்து முடிக்கும் ஆற்றலையும், மனஞ்சோரா–மையையும் நாம் வளர்த்துக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இத்தகைய அருந்திறன் மக்களைக் காக்க வேண்டிய தருணத்தில் எவ்வாறு கை கொடுக்கும் என்பதை நரேனின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல சம்பவங்கள் தெற்றென விளக்கும்.




ஒரு நாள் திடீரென தெருவில் பெருங்குழப்பமொன்று உண்டாயிற்து. இடி முழக்கம் போல் தறிகெட்ட பரியொன்று (குதிரையொன்று) வண்டியை இழுத்துக்கொண்டு மின்னலெனப் பாய்ந்து ஓடிவருவதைக் கண்டு தெருவில் செல்பவர்கள் அனைவரும்

அஞ்சி நடுநடுங்கிப் போயினர். வண்டியில் பாவை ஒருத்தி அமர்ந்திருந்தாள். என்ன நிகழுமோ உதவிட ஒருவருமில்லையே என்று அஞ்சி நடுக்குற்றாள். பீதியுற்ற பார்வையாளர்கள் செயலிழந்து திகைத்து நின்றனர். ஆபத்தில் மாட்டிக் கொண்ட மாதரசியின் நிலையை இளம் நரேன் உடனடியாகப் புரிந்து கொண்டான். மின்னலெனக் கடுகி ஓடி வேகமாகத் தாவிக் குதிரையின் மீதேறி, தறி கெட்ட குதிரையைத் தன் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்து, அதனை சட்டென நிற்க வைத்தான். அச்சம் மேலிட்டதால் சாவினை எதிர்நோக்கியிருந்த அம்மாதரசியை நரேனின் துணிச்சலும் விரைந்த நடவடிக்கையும், காப்பாற்றின. இக்காட்சியினைக் கண்ணுற்ற அனைவரும் நரேனின் துணிச்சலையும், திறமையையும் மனஞ்சோராமை – யையும் மனதாரப் பாராட்டினர்.

## ஆங்கில மாலுமிக்கு ஆற்றிய உதவி

நரேனுக்கு உடற்பயிற்சிகளில் நாட்டம் அதிகம். அவனுடைய இல்லத்திற்கு அருகில் உடற்பயிற்சிக் கூடம் ஒன்றிருந்தது. தம்






5

நண்பர்களுடன் அவன் அங்கு சென்று வருவது வழக்கம். ஒருநாள் உடற்பயிற்சிக் கூடத்தில் ஊஞ்சல் ஒன்றினை நிலைநாட்ட முனைந்தார்கள் அவர்கள். இளஞ்சிறார்கள் ஊஞ்சலை நிலைநாட்டப் படும்பாட்டினைக் கண்ணுற்ற ஆங்கில மாலுமியொருவர் அவர்களுக்கு உதவிட முன்வந்தார். தற்செயலாக, ஊஞ்சல் கம்பம் ஒன்று மாலுமியின் தலைமீது வீழ்ந்து காயமேற்பட்டு விட்டது. குருதி பெருகியது. அவர் தரையில் வீழ்ந்து விட்டார். மாலுமியின் தலையில் பீறிட்டுவரும் இரத்தத்தைக் கண்ட சிறுவர்கள் அச்சமுற்றுக் குழப்பமுற்றார்கள்; செய்வதறியாது திகைத்து நின்றார்கள். ஆனால் நரேன் தன் மனத் துணிவை இழக்கவில்லை. தன்னுடைய சட்டையைக் கிழித்து மாலுமியின் தலையில் அவன் கட்டுப்போட்டான். பின்னர் மாலுமியின் அருகே அமர்ந்து விசிறத் தொடங்கினான். வெகுவிரைவில் மாலுமி தன் சுயநினைவெய்தினார். நரேன் பின்பு தன் நண்பர்களிடமிருந்து சிறிது பணந்திரட்டி மாலுமிக்குக் கொடுத்து உதவினான்.

## அத்தியாயம் மூன்று

### கற்றலும் கனிவுறு ஆய்வும்


நரேனுக்கு இருந்த பண்புகளில் ஒன்று அவனுக்கிருந்த சீரிய நினைவாற்றலும், எதையும் உடனே புரிந்து கொள்ளும் தன்மையுமாகும். எனவே அவன் தனது பாடங்களை வெகு எளிதாகக் கற்றுக் கொண்டான். இதன் பயனாக, தன் தேர்வுகள் அனைத்திலும் அவன் சிறப்பாகத் தேறி வந்தான். சம்ஸ்கிருதம், ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்கள் அவனுக்குப் பிடித்தமானவையாய் இருந்தன. கணக்கு அவனுக்குப் பிடிக்காத பாடம்; எனினும் அதிலும் அவன் சோடை போகவில்லை. 1879 ஆம் ஆண்டில் கல்கத்தா பல்கலைக் கழகத்தின் நுழைவுத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றான். 1884ஆம் ஆண்டில் அவன் இளங்கலை எனப்படும் பி.ஏ. பட்டப்படிப்பிலும் தேர்ச்சி பெற்றான். கல்லூரியில் படித்த காலத்தில் அவன் பல்வேறு

பாடங்களைச் சார்ந்த, விதவிதமான நூல்களைப் படிப்பதில் பேரார்வம் கொண்டிருந்தான். அவனுடைய இணைமாணவர்களும், பேராசிரியப் பெருமக்களும் அவனுக்கிருந்த பரந்த அறிவினைப் புகழ்ந்து பாராட்டினர். ஆங்கிலேயரான பேராசிரியர் டபிள்யூ. டபிள்யூ. ஹேஸ்டி என்பார் கூறிய சொற்களை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருந்தும்: "நரேந்திரன் உண்மையிலேயே ஒரு மாமேதை. நான் உலகில் பலநாடுகளில் பயணம் செய்துள்ளேன். எனினும் அவனுக்கு இணையான திறமைகளும் தகுதிகளும் வாய்க்கப் பெற்ற பிறிதொரு மாணவனை – ஜெர்மானியப் பல்கலைக்கழகங்களில் கூட–தத்துவ இயல்துறையைச் சார்ந்த மாணவர்கள் இடையேயும் கூட என்னால் காண இயலவில்லை. நரேந்திரன் தன் வாழ்நாளில் மகத்தான சாதனைகளைச் செய்யப் போகிறான்" என்றார். நூல்களைக் கற்பதில் இருந்த நாட்டத்தைப் போன்று அவனுக்கு இசையிலும் மிகுந்த ஈடுபாடிருந்தது. இனிமையாகப் பாட வல்லவனாக இருந்த அவனுக்கு ஒரு சில இசைக்கருவிகளை இசைக்கவும் தெரிந்திருந்தது. இவையனைத்தும் வருங்கால உலகம் அடையாளம் கண்டு கொண்ட மாபெரும் சாதனையாளருக்கே உரித்தான அருங்குணங்களாக அன்றே அவனிடம் பொருந்தியிருந்தன.

## என்றும் தணியாத ஞானத் தாகம்

நரேனிடம் நிலவிய நற்குணங்களில் ஒன்று அவனிடம் தென்பட்ட என்றும் தணியாத ஞானத் தாகமாகும். வெறும் புத்தகப்புழுவாய் இருந்து பெறும் அறிவுடன் மட்டும் அவன் திருப்திப்படவில்லை. மேலான பரம்பொருள் தத்துவங்கள் பற்றிய ஞானத்தைப் பருகிட அவன் பெரும் நாட்டம் கொண்டான். ஏற்கனவே நாம் அறிந்துள்ளபடி, நரேன் சிறுபையனாக இருந்த காலத்தில் கூட தியானம் செய்யும் பழக்கத்தை இயல்பாகக் கொண்டிருந்தான். உள்ளத்தூய்மை மனவலிமை போன்ற குணங்களை அவன் போற்றி வந்தான். கடவுளைக் காண வேண்டும் என்பதில் அவனுக்குத் தீவிர ஆர்வம் இருந்தது. கடவுள் என்று ஒருவர் இருப்பது உண்மையானால் அவரைக் கண்டே ஆக வேண்டும்

என்பதை அவன் உணர்ந்தான். அந்நாளில் வங்காள மாநிலத்தில் பிரம்ம சமாஜம் என்னும் சமூக சீர்த்திருத்த இயக்கம் பொது மக்களுக்குக் கூட அறிமுகமாகி இருந்தது. இராஜா ராம்மோகன்ராய் என்ற பெரியாரால் அது தோற்றுவிக்கப்பட்டது. அப்பெரியார் அக்காலத்தில் தலைசிறந்த சிந்தனையாளர்களில் ஒருவராவர். அவர் புதியதொரு வழிபாட்டு முறையை வலியுறுத்தி வந்தார். பிரம்மசமாஜிகள் உருவ வழிபாட்டிற்கு எதிராகப் பிரசாரம் செய்து வந்தனர். எனினும் ஹிந்து சமயத்தில்கடவுளை உருவங்களாகச்



செய்து வழிபட்டு வரும் முறை தொன்றுதொட்டு நடைமுறையிலிருந்த இன்றியமையாத பகுதியாகக் கருதப்பட்டது. பிரம்ம சமாஜத்தின் தீவிர உறுப்பினர்களாக புகழ்பெற்ற பல சான்றோர்கள் இருந்தனர். பகுத்தறிவுவாதியாகத் தன்னைக் கருதிக் கொண்ட நரேந்திரநாதனும் பிரம்ம சமாஜம் பரப்பி வந்த கருத்துக்களில் பலவற்றை ஏற்றுக் கொண்டிருந்தான். ஆனால், கடவுளின் உண்மையான தன்மை என்ன என்பது பற்றி அவனுள் கிளர்ந்தெழுந்த கேள்விக்கு அவனால் உருப்படியான விடையைக் காண முடியவில்லை. ஆசார சீலராகவோ அன்றித் துறவி போலவோ காட்சியளிக்கும் எவரையேனும் பார்க்க நேரிட்ட போதெல்லாம் அவன் நேரிடையாக கேட்பான்: "ஐயன்மீர்! தாங்கள் கடவுளைக் கண்டதுண்டா?" என்று. பல்வேறு கிறிஸ்தவப் பாதிரிகளையும், முஸ்லீம் சமயக் குருமார்களையும் கூட அவன் சந்தித்து அவர்களிடமும் அதே கேள்வியைக் கேட்டான். ஆனால் ஒருவராலும் அவனுக்கு நேரிடையானதும், ஆக்க பூர்வமானதுமான மறு மொழியைக் கொடுக்க இயலவில்லை. புகழ்பெற்ற கவிஞர் இரவீந்திரநாததாகூரின் தந்தையாரான மகரிஷி தேவேந்திரநாத தாகூர் அவர்களும் நரேன் சந்தித்த பெருமனிதர்களுள் ஒருவராவர். அவர்களிடமும் நரேன் அதே கேள்வியைக் கேட்டான்: "ஐயன்மீர்! தாங்கள் கடவுளைக் கண்டதுண்டா?" "இல்லை. நான் கடவுளைக் கண்டதில்லை. ஆனால் உன்னால் அவனைக் காண இயலும் என்று நான் நம்புகிறேன். உன்னிடம் யோகியரிடம் காணப்படும் கண்கள் இருக்கின்றன", என்று தேவேந்திரநாதர் பதில் விடுத்தார். நாட்கள் செல்லச் செல்ல கடவுளைக் காண வேண்டும் என்ற தாகம் மேலிட்டு நரேன் அமைதியிழந்து தவித்தான்.

## தட்சிணேசுவரத்தில் ஏற்பட்ட திருப்புமுனை

"வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் என்ற கவிஞரால் எழுதப் பெற்றது, சுற்றுலா" என்னும் புகழ்பெற்ற கவிதையாகும். ஒரு நாள் பேராசிரியர் ஹேஸ்டி இக்கவிதையைத் தம் வகுப்பு மாணவர்களுக்கு

விளக்கிக் கொண்டிருந்தார். பேராசிரியர் விளக்கிக் கொண்டிருந்த சொற்களில் 'மெய் மறதி நிலை' அல்லது 'சமாதி' என்ற சொல் குறிப்பிடத் தக்கதாய் இருந்தது. அதை விளக்கி வரும் வேளையில் தட்சிணேசுவரத்தில் வாழ்ந்த ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரைப் பற்றியும் அவர் குறிப்பிட்டார். பரமானந்தம் அளிக்கக்கூடிய ஆன்மீக அனுபவத்தைத்தான் மெய்மறந்த நிலை அல்லது சமாதி என்பர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கடவுளைக் குவலயத்தின் தெய்வத்தாயாக கருதியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய ஜகன்மாதாவைத் தட்சிணேசுவரத்துக் காளி கோவிலில் குடிகொண்டிருக்கும் காளிமாதாவின் வடிவில் அவர் வழிபட்டார். உருவ வழிபாட்டின் மூலம் கடவுளைக் காணும் அவருடைய அனுபூதி, உருவ வழிபாட்டைக் கடுமையாகக் கண்டித்தவர்களுக்கு மரண அடியைக் கொடுத்தது. நரேனும் ஏற்கனவே ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தான். எனினும் அவரைப் பற்றி பல ஐயப்பாடுகளும் அவனிடம் குடிகொண்டிருந்தன. ஆனால் பேராசிரியர் ஹேஸ்டியும் அவரைப் பற்றி உயர்வாகக் குறிப்பிட்டதைக் கேட்டதும், தட்சிணேசுவரத்துத் துறவியைக் காணவேண்டும் என்ற ஆவல் நரேனுக்கு மேலிட்டது.

1882ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை குளிர்காலத்துப் பிற்பகல் சமயத்தில் நரேன் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைக் காணச் சென்றான். ஸ்ரீ ராம கிருஷ்ணருடன் நரேனின் இந்தச் சந்திப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். அதனையொரு திருப்புமுனை என்று சொல்ல வேண்டும். ஏனெனில் அதற்குப் பின்னர்தான் நரேனின் வாழ்வில் உயரிய திருப்பம் ஏற்பட்டது. அவனுடைய வாழ்க்கை ஆற்றல் மிக்கதாயும் ஊக்கமிக்கதாயும் உருமாற்றப்பட வேண்டியிருந்தது. அத்தகைய உருமாற்றந்தான் என்னே! நரேந்திரநாதனை சுவாமி விவேகானந்தராக மாற்றம் பெறச் செய்வதே அந்த உருமாற்றமாகும். நரேனின் முதல் சந்திப்பே ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கு மகிழ்ச்சியும் உள்ளக் கிளர்ச்சியையும் அளித்தது. உண்மையான சீடனை

வேண்டிய ஸ்ரீ இராமகிருஷ்ணரின் வேண்டுகோளுக்கு கடவுளே செவிசாய்த்து விட்டானோ என்று கூறுமளவிற்கு அது அமைந் திருந்தது. "அன்பான இளைஞனே, எவ்வளவு காலம் உனக்காகக் காத்திருந்தேன் தெரியுமா?" என்று உணர்ச் சிவசப்பட்டுச் சொன்னார் இராமகிருஷ்ணர். ஸ்ரீ இராமகிருஷ்ணரைச் சந்தித்த இவ்வரலாற்றுச் சிறப்பு மிக்கச் சந்திப்பினைக் குறித்து நரேனே (சுவாமி விவேகானந்தர்) பின் வருமாறு கூறுகிறார்: "இந்த மனிதரைப் பற்றி கேள்வியுற்ற பின் அவரைச் சந்திக்கச் சென்றேன்.



குறிப்பிடத்தக்கச் சிறப்பு அம்சம் எதுவுமின்றி மிகச் சாதாரண அவர் மனிதராகவே தோற்றமளித்தார். மிகமிக எளிய மொழியினையே அவர் பயன்படுத்தினார். 'இப்படிப்பட்ட சாதாரண மனிதரால் ஒரு பெரும் ஆசிரியராக இருக்க இயலுமா?' என்றுதான் நான் சிந்தித்தேன். அவர் அருகில் நகர்ந்து சென்று என் வாழ்நாள் முழுவதும் மற்றவர்களிடம் கேட்ட அதே கேள்வியை அவரிடமும் கேட்டேன்:

"ஐயன்மீர்! உங்களுக்கு கடவுள் மீது நம்பிக்கை உண்டா?"

"ஆம், உண்டு."

"எப்படி?"

"தற்போது உன்னைப் பார்ப்பது போலவே அவரையும் நான் காண்கின்றேன். இதைக் காட்டிலும் இன்னும் ஆழ்ந்த பார்வையில் காண்கிறேன் என்பது தான் இங்கிருக்கும் வேறுபாடு."

"அவருடைய பதில் உடனே என்னைக் கவர்ந்துவிட்டது. முதன் முறையாக கடவுளைக் கண்டுவிட்டதாகக் கூறத் துணிந்த ஒருவரை நான் கண்டு கொண்டேன்."

## இரண்டாம் சந்திப்பு

1882ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இரண்டாம் முறையாகத் தட்சிணேசுவரத்துத் துறவியை நரேன் சென்று கண்டான். இம்முறையும் அது வியப்பு தரத்தக்கச் சந்திப்பாகத்தான் அமைந்தது. ஏனெனில் இந்தச் சந்திப்பின்போதுதான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், இளமைத்துடிப்பும், உண்மை நாட்டமும் கொண்ட தன் அருமை நரேனுக்கு கடவுள் உணர்வைப் பெறும் முதல் அனுபவத்தை வழங்கினார். முதன் முறை சந்தித்த பின்னர் நரேனை மீண்டும் காண வேண்டுமென ஸ்ரீ இராமகிருஷ்ணர் அடிமனதில் எண்ணிவரலானார். எனவே மீண்டும் நரேன் அவரைக் காண வந்த போது, அவர் அகம் மிக மகிழ்ந்தார். அதே சமயம் கடவுள் மீதும் தம் மீதும்

நரேனுக்கிருந்த ஐயப்பாடுகளைக் களைய வேண்டுமெனவும், நரேனுக்கு புதியதொரு தரிசனத்தை கொடுக்க வேண்டுமெனவும், ஸ்ரீ இராமகிருஷ்ணர் உணர்ந்து கொண்டார். எனவே ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவனைத் தம் அருகில் வரும்படி அழைத்தார். அடுத்து நிகழ்ந்ததென்ன என்பதை நரேனின் சொந்த சொற்களிலேயே காண்போம்: “கண் சிமிட்டும் நொடிப் பொழுதில் அவர் தமது வலது பாதத்தை என் உடம்பின் மீது வைத்தார். அவர் என்னைத் தொட்ட மாத்திரத்தில் நான் புதுமையானதொரு அனுபவத்துக்காளானேன். என் கண்கள் அகலத் திறந்திருந்த நிலையிலேயே அந்த அறையின் சுவர்களும், அதனுள் இருந்த அனைத்தும் தலைகீழாய் சுழன்று விலகி சூனியத்தில் மறைந்து போவதைக் கண்டேன். என் தனித்தன்மையுடன் இப்படைப்பு முழுமையும் அனைத்தையும் சூழ்ந்து கவிந்து கொள்ளும் மாபெரும் சூனிய வெளியில் புகுந்து கொள்ள விரைவதாகத் தென்பட்டது.



அத்தகைய உணர்வினைத் தாங்கிக் கொள்ள முடியாதவனாக, "ஐயா! நீங்கள் என்னை என்ன செய்கிறீர்கள்? வீட்டில் என் தாய் தந்தையர் எல்லாம் இருக்கிறார்களே?" என்று ஓலமிட்டேன். அந்த விந்தை மனிதர் பெரிதாக நகைத்து என் மார்பைத் தடவிக் கொடுத்தபடி, 'சரி! இப்போதைக்கு இது போதும், எல்லாம் உற்ற சமயத்தில்தானே வரும்...' என்றார்." அதன் பின்னர் நரேன் தனது பழைய நிலைக்குத் திரும்பினான். ஆனால் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவனுக்குக் கொடுத்த இந்த அனுபவம் தன்னிகரற்றச் சிறப்பு வாய்ந்ததாகும். எனினும் தன்னுடைய சொந்த பகுத்தறிவுத் திறனால், தான் பெற்ற அனுபவம் போலியானதே என்று நரேன் புறக்கணிக்க முற்பட்டான். அவனுக்கு பல்வேறு ஐயப்பாடுகள் இருந்தன. அது என்ன மந்திர தந்திரமோ? அது மன ஆற்றலால் அறிதுயிலூட்டும் மாய்மாலமாயிருக்குமா? இல்லை. அந்த விந்தை மனிதர் என்மீது தந்திரங்களை விளையாடிக் காட்டினாரா? இப்படிப்பட்ட சிந்தனை அலைகளால் நரேனின் மனம் அலைக்கழிக்கப்பட்டது. ஆனால் காலம் என்னும் மருத்துவன் தான் அதை ஆற்றி விடக் கூடியவன். விதியின் விளையாட்டோ என்னவோ? காலப்போக்கில் அவனுடைய ஐயப்பாடுகள் அனைத்தும் அகன்றன. சித்து விளையாட்டிலோ அல்லது மாந்திரீக சக்திகளிலோ நரேனுக்கு ஆர்வமில்லை. அனைத்து உணர்விலும் மேம்பட்டதாகிய இறையுணர்வினைப் பெறும் அறிவினை பெறவே அவன் விழைந்தான். இத்தகைய மனப்பக்குவத்தை நரேன் பெற்றிருக்கிறான் என்று உய்த்துணர்ந்த ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அருளாசியால் அதனை அவன் பெற்றான். எனவே ஸ்ரீ இராமகிருஷ்ணரை தம் ஆசானாக அவன் ஏற்றுக் கொண்டான். தன் ஆசான் ஓர் இறைவன்–மகான்–மெய்ஞானத்தை அறிந்த அனுபூதிமான் என்று நம்பினான்.

## இராமகிருஷ்ணரின் பற்றின்மையை பரிசோதித்த நரேன்

ஸ்ரீ இராமகிருஷ்ணர் புனிதப் பிறவி; ஞானி; பணம், பொன் போன்ற ஆசைகளை அறவே ஒதுக்கித் தள்ளியவர். உலக பந்த

பாசங்களில் இருந்து முற்றிலும் விடுபட்டவர். பெண்ணைத் தெய்வீக அன்னை என்று கருதிய பெம்மான். நரேனை ஸ்ரீ இராமகிருஷ்ணர் தூண்டிவிட்டு 'பணத்தை மாற்றுபவர்கள் ஒவ்வொரு நாணயத்தையும் செல்லுமா என்று பரிசோதிப்பது போல் என்னையும் பரிசோதித்துப் பார்' என்று ஊக்குவித்திருந்தார். தம் ஆசான் அறையை விட்டு வெளியே சென்றிருந்த போது, அவருடைய படுக்கையின் அடியில் ஒரு ருபாய் நாணயம் ஒன்றினை ஒளித்து வைத்தான். பின்னர் ஆசான் திரும்பி வத்ததும் வழக்கம் போல் அவர் படுக்கையின் மீது அமர்ந்தார். அப்படி உட்கார்ந்ததுதான் தாமதம், ஏதோ தேள்




கொட்டிவிட்டது போல் துள்ளிக் குதித்தார். அவசர அவசரமாக படுக்கையின் மீதிருந்த விரிப்பை விலக்கிப் பார்த்தார். அங்கு ஒரு நாணயம் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியுற்றார். அமைதியிழந் தவராய், "இந்த நாணயத்தை இங்கு வைத்தது யார்?" என்று அவர் வினவினார். தம் ஆசான் அடைந்த துன்பத்தை கண்ணுற்றவாறு நின்றிருந்த நரேன், தம் ஆசானின் உலகாதாய பொருள்கள் மீது அவருக்கிருந்த பற்றின்மையைப் பரிசோதிக்க தானே அவ்வாறு செய்ததாக உடனே ஒப்புக்கொண்டான். உண்மை ஒன்றினை மட்டுமேயன்றி வேறெதனையும் ஏற்றுக் கொள்ள

விரும்பாத தம் சீடனின் ஆழ்ந்த நேர்மையினை ஆசானும் பெரும் அனுதாபத்துடன் அறிந்து கொண்டார். இச்சம்பவத்தால் நரேன் மீது அவருக்கிருந்த அன்பு மேலும் அதிகரித்தது.

## தொல்லைதீர தெய்வத்தாயிடம் (ஜெகன்மாதாவிடம்) கேட்ட வரம்

ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கும் நரேந்திரனுக்கும் இடையே எழுந்த குரு–சிஷ்ய உறவு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வலுப்பெறலாயிற்று. நரேனின் தந்தையாரான விசுவநாதர் திடீரென அகால மரணமடைந்ததன் விளைவாக அவனுடைய குடும்பம் சொல்லொணாத் தொல்லைகளுக்காளாயிற்று. வறுமை கோர தாண்டவமாடியது. வீட்டில் தாண்டவமாடிய இக்கொடிய வறுமையைக் குறித்து நரேந்திரன் ஸ்ரீ இராமகிருஷ்ணரிடம் வெளிப்படையாகப் பலமுறை பேசியிருந்தான். தன் சார்பாக ஜெகன்மாதாவான



தெய்வத்தாயிடம் பரிந்துரைத்து தன் வறுமையை விரட்ட அன்னையின் திருவுளம் பற்றச் செய்யுமாறு முறையிட வேண்டுமென ஸ்ரீ இராமகிருஷ்ணரிடம் அடிக்கடி அவன் கேட்டுக் கொண்டான். அவ்வாறு கேட்ட சந்தர்ப்பம் ஒன்றில் ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஜெகன்மாதாவான அந்தத் தெய்வத்தாயிடம் நரேனே முறையிடுமாறு பணித்தார். "கோவிலில் குடி கொண்டிருக்கும் அத் தெய்வத்தாயிடம் உன்னுடைய தொல்லைகள் அனைத்தையும் கூறிடுக. உன்னுடைய துன்பங்களிலிருந்து உன்னை மீட்க அவள் என்ன செய்கிறாள் என்று பார்" என்று அவர் கூறினார். மும்முறை நரேந்திரன் கோவிலுக்குப் போனான். ஒவ்வொரு தடவையும், அன்னையின் உருவச் சிலை முன் நின்று கொண்டு, வீட்டில் வாழும் தன் குடும்பத்தினரின் இன்னல்களைக் களைந்திட வேண்டுமென முறையிட முயற்சி செய்தான். ஆனால் அவனுடைய உதடுகளில் வந்தவை இதுதான்: "ஹே! ஜெகன்மாதாவே, எனக்கு ஞானம் என்னும் அறிவினைக் கொடுத்திடுவாயாக" என்றே அவனால் கேட்டுக் கொள்ள முடிந்தது எவ்வளவோ தீவிரமாக முயன்றும் கூட ஜெகன்மாதாவிடம் ஞானம் அல்லது அறிவினை வேண்டுவதைத் தவிர வேறொரு வரத்தை அவனால் கேட்க இயலவில்லை.

## அத்தியாயம் நான்கு

### பரிவிராஜகர் அல்லது நாட்டினைச் சுற்றி வந்த ஞானத்துறவி

1886 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் நாள் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் தம் ஆன்மீகத் துணைவியார் அன்னை சாரதாமணி தேவியாரை விடுத்து மகாசமாதி என்னும் வீடு பேற்றை அடைந்தார். அதற்குள் நரேன் அவருடைய வருங்காலப் பணியினை மேற்கொள்வதற்குரிய தகுதியைப் போதுமான அளவிற்கு பெற்றிருந்தான். ஸ்ரீ இராமகிருஷ்ணரின் தேர்ந்தெடுக்கப் பெற்ற சீடராகவும் ஸ்ரீ இராமகிருஷ்ணருடைய சீடர் குழுவின் தலைவராகவும்

அனைவராலும் அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தார். உலக பந்தபாசங்களை அவர் துறந்து விட்டார். 1890 ஆம் ஆண்டில் தாய்நாட்டை வலம்வந்து, அதன் உண்மைகளைக் கண்டறிய நரேன் முடிவு செய்தார். அதன் மூலம் தம் சொந்த செயல் நோக்கத்தையும் மற்றும் வாழ்க்கைக் குறிக்கோளையும் தெளிவாக அறியும் பொருட்டே தாய்நாட்டை வலம் வர அவர் விரும்பினார்.

நரேன் மூன்றாண்டு காலம் நாட்டின் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை சுற்றி வலம் வந்தார். தம்மைப் பெற்ற பொன்னாட்டையும் அதன் மக்களையும் பற்றிய நேர்முக அறிவினை அது அவருக்கு நல்கியது. மன்னர் பெருமக்களிடமும் ஏழை எளியோர்களிடமும் வேறுபாடு ஏதுமின்றி அவர் கலந்து பழகினார். கற்றறிந்த பெரியோர்களையும் கல்லாதவர்களையும் சந்தித்துப் பேசினார். இங்ஙனம் நாட்டை வலம் வந்த காலத்தில்தான் கேத்ரி என்ற சமஸ்தானத்தின் மகாராஜாவான அஜீத்சிங் என்பார் சுவாமிஜிக்கு அறிமுகம் ஆனார். சுவாமிஜியின் மீது அவருக்கு ஆழ்ந்த அன்பும், மரியாதையும் அபிமானமும் ஏற்பட்டிருந்தது. வெகு விரைவில் நானிலம் முழுவதும் எல்லோருக்கும் தெரிந்த பெயரான சுவாமி விவேகானந்தர் என்ற பெயரினைச் சூட்டியவரும் இதே அஜித்சிங் மகாராஜாதான்.

நாட்டை வலம் வந்த ஞானத்துறவியாக வாழ்ந்த நாட்களில் சுவாமிஜியின் வாழ்க்கையில் சுவையானதும், உணர்ச்சி கொடுப்பதுமான பல்வேறு நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

## பாயும் புலியினைக் கண்டு அஞ்சிடாப் பேராண்மை

ஒரு சமயம் கேத்ரி அரசர் வேட்டையாட காட்டிற்குச் சென்றார். அரசரின் வேண்டுகோளுக்கிணங்க சுவாமிஜியும் உடன் சென்றார். அரசரும் அவருடைய பணியாட்களும் வேட்டையில் மூழ்கியிருந்தபோது, சுவாமிஜி மட்டும் தன்னந்தனியராய் மரத்தடியில் ஊன்றுகோலுடன் சிந்தனையில் ஆழ்ந்தார். அந்நேரத்தில் பாயும்


புலியொன்று பாய்ந்து வந்தது. முதலில், அதனை எதிர்த்து போராட வேண்டுமென சுவாமிஜி எண்ணினார். போராட நேரிட்டால் பசித்துப் பாய்ந்து வரும் அப்பாயும் புலிக்கு இரையாக நேரிடக் கூடும் என்ற எண்ணம் வந்த போது தம் கருத்தை மாற்றிக் கொண்டார்.



சும்மாயிருப்பதென்று அவர் முடிவு செய்தார். புலியை அவர் உற்றுப் பார்த்தார். புலியும் சிறிது நேரம் அவரை உற்றுப் பார்த்து விட்டு, அவருக்கு யாதும் ஊறு செய்யாமல் வந்த வழியே திரும்பிச் சென்று விட்டது. இதற்குள் சுவாமிஜி இருந்த பகுதிக்கு அருகில் புலி நடமாடக் கூடும் என்று உய்த்துணர்ந்த அரசர், அந்த இடத்துக்கு விரைந்து வந்து, பாயும் புலியிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் நிமித்தம் துப்பாக்கி ஒன்றினைக் கொடுத்தார். துப்பாக்கியை வாங்கிக் கொள்ள மென்மையாக மறுத்த சுவாமிஜி, “தங்களைக் காத்துக் கொள்ளத் துறவிகளுக்குத் துப்பாக்கிகள் தேவையில்லை. பாயும்புலி கூட அவர்களுக்கு எவ்வித ஊறும் விளைவிக்கா. இறைவனின் படைப்பான எவ்வுயிரும் என்னைக் கண்டு அஞ்சத் தேவையில்லை” என்று கூறினார்.

## பொன்னான பாடம் :
## " முரட்டு விலங்குகளை எதிர்த்து நின்றிடு "

பெரும்பாலான மக்கள் வெகு எளிதில் தன்னம்பிக்கையை இழந்து விடுகிறார்கள். வாழ்க்கையில் எதிர்ப்படும் சிறுசோதனைகளும் சிக்கல்களும் அவர்களுக்கு அச்சத்தையும் துயரத்தையும் ஊட்டிவிடும். அத்தகைய மக்களுக்கு சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சியொன்று பொன்னான பாடமாக அமையும். அது பற்றி சுவாமிஜி குறிப்பிட்டுள்ளதைக் கேளுங்கள்: "நான் வாரணாசியில் இருந்தேன். ஒரு பக்கம் பெரியதொரு குளமும் மறுபக்கம் நீண்டு உயர்ந்த நெடிய சுவரும் இருந்த தெருவொன்றின் வழியாக நான் சென்று கொண்டிருந்தேன். அங்கிருந்த திடல் ஒன்றில் ஏராளமான குரங்குகள் இருந்தன. வாரணாசியில் இருக்கும் குரங்குகள் தடித்த விலங்குகளாயிருந்ததோடன்றி சில வேளைகளில் முரட்டுத்–



தனமாகவும் கூட நடப்பவை. தாம் வாழும் தெரு வழியாக என்னைச் செல்ல விடக் கூடாதென்று முடிவு செய்து விட்டன போலும். நான் நடந்து செல்லுகையில் அவை கீச்சுக் கீச்சென கூச்சலிட்டும் வீறிட்டு அலறியும் என்னுடைய பாதங்களைப் பிடித்து இழுத்தும் வம்பு செய்தன. அவை என்னை மிக நெருங்கி வரவே, நான் ஓடத் தொடங்கினேன். நான் எவ்வளவுக்கெவ்வளவு வேகமாக ஓடினேனோ அக்குரங்குகளும் வெகுவிரைவாக ஓடிவந்து என்னைக் கடிக்கத் தொடங்கின. அவற்றினிடமிருந்து தப்ப முடியாது போன்ற சூழ்நிலையில் முன்பின் தெரியாத வழிப்போக்கர் ஒருவர் என்னிடம் உரத்தகுரலில் "முரட்டு விலங்குகளை எதிர்த்து நின்றிடு" என்று கத்தினார். நான் உடனே திரும்பி குரங்குகளை நேருக்கு நேர் பார்த்தவுடன் அவை பின்வாங்கி பின்னர் ஓடத் தொடங்கின. அந்நிகழ்ச்சி என் வாழ்க்கைப் பாடமாய் அமைந்தது. இடுக்கண் வருங்கால் அஞ்சாமல் அதனை எதிர்கொள்க; துணிச்சலுடன் அதனை எதிர்த்திடுக என்பதே அப்பாடம். குரங்குகளைப் போன்று, நம்மை எதிர்நோக்கி வரும் இடர்ப்பாடுகளும் அவற்றைக் கண்டு அஞ்சி ஓடாமல் எதிர்த்து நின்றோமானால் விலகி ஓடிவிடும். சுதந்திரம் நாம் பெறுவதாயின், இயற்கையை வெற்றி கொள்வதன் மூலமேயன்றி, ஓடி ஒளிவதன் மூலமன்று. அச்சத்தை நாம் எதிர்த்துப் போராடுவோமாக, துன்பங்களும் அறியாமையும் நம்மைவிட்டு நீங்க வேண்டுமாயின் நாம் அவற்றை எதிர்த்து நிற்க வேண்டும்."

## புதிரான வினாவிற்குப் புதிரான விடை

சுவாமிஜி பாரதத் திருநாட்டை வலம் வந்து கொண்டிருந்த நாட்களில் ஆள்வார் சமஸ்தானத்திற்குச் சென்றார். அனைத்து அரசாங்க மரியாதைகளுடனும் மகாராஜா அவரை வரவேற்றார். மகாராஜா இளம் வயதினர்; மேலும் மேற்கத்திய நாகரிகத்தில் ஓரளவு ஊறித் திளைத்தவராயும் இருந்தவர். உருவ வழிபாட்டில் அவருக்கு நம்பிக்கை இருக்கவில்லை. சுவாமிஜியுடன் உரையாடிக்கொண்டிருந்த போது, கோயில்களில் கற்சிலைகளை

வணங்கும் பழக்கத்தை இளக்காரமாக நையாண்டி செய்யும் கேள்விக் கணைகளைத் தொடுத்தார். உருவ வழிபாடும் இறைவனைத் தொழுதற்குரிய ஒரு வழிபாட்டு முறைதான் என்றும், அதில் தவறேதுமில்லை என்றும் சுவாமிஜி மகாராஜாவிற்குப் பதில் கூறினார். மகாராஜா அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தம் கருத்தின் உட்பொருளை உணரச் செய்யும்–பொருட்டு அங்கிருந்த




அமைச்சரிடம், சுவரில் தொங்கிக் கொண்டிருந்த மகாராஜாவின் உருவப்படத்தைக் கொண்டுவரும்படி கேட்டுக் கொண்டார். அமைச்சர் படத்தைக் கொணர்ந்து சுவாமிஜியிடம் கொடுத்தார். பின்னர் மகாராஜாவின் படத்தின் மீது காறித் துப்பும்படி சுவாமிஜி அமைச்சரிடம் கூறினார். அதனைக் கேட்ட அமைச்சரின் தலை சுற்றத் தொடங்கி விட்டது. "அய்யய்யோ! முடியாது; என்னால் எப்படி அவ்வாறு செய்ய இயலும்?" என்றார். உண்மையான மகாராஜாவின் ஓர் அடையாளமாக மட்டுமே அந்த உருவப்படம் இருந்த போதிலும்,

உயிரற்ற வெறும் ஓவியந்தான் அது என்பதை அறிந்திருந்த போதிலும் அதன் மீது காறித் துப்ப அமைச்சர் ஒப்புக் கொள்ள மறுத்ததை சுவாமிஜி மகாராஜாவுக்குச் சுட்டிக் காட்டினார். அதைப் போலவே, உருவத்தை வழிபடுவதும் ஓர் அடையாளச் செயல்தான் என்றும், அது காலப் போக்கில் சாதாரண மக்களுக்கு மனதை ஒருமுகப்படுத்தி, ஆன்மீக மேனிலைக்கு உயர்த்திச் செல்லவல்லது என்றும் அவர் எடுத்துக் காட்டினார். கோவில்களில் இருக்கும் அற்புத சக்திகள் குறித்தும், உருவ வழிபாடு போன்றவை குறித்தும் பல உண்மைகள் அறியப்பட்டுள்ளன. சுவாமிஜி புரியாததொரு பெரும்புதிரை எவ்வளவு எளிய முறையில் புரிய வைத்துவிட்டார் என்பதே இங்கு சிறப்பாக கவனிக்க வேண்டியதாகும்.

## வலிமையாக வாழ்! உறுதியாக நில்!!

சுவாமி விவேகானந்தர் அவர்களின் தலைசிறந்த குணங்களில் குறிப்பிடத் தக்கதாய் அவருடைய அச்சமின்மையைக் குறிப்பிடுவர். வலிமைமிக்கவராயும், தூய்மைமிக்கவராயும் இருப்பதையே அவர் விரும்பினார். "இரும்பினையொத்த தசைகளையும், எஃகினையொத்த நரம்புகளையும் கொண்டவர்களே நமக்குத் தேவை" என்று எப்போதும் வலியுறுத்தும் வீரவாசகமே அவர் தம் கூற்றுகளுள் ஒன்றாகும். உண்மையில் சக்தி வாய்ந்த தசைகளையும், வலிமையுற்ற நரம்புகளையும் கொண்ட உடற்கட்டினைப் படைத்தவராக அவரே விளங்கினார். அவருடைய உடலுறுதியும், எதற்கும் அஞ்சாத நெஞ்சுரமும் இரு ஐரோப்பியர்களை எவ்வாறு அடங்கிடச் செய்தது என்பது ஒரு சுவையான சம்பவமாகும்.

இராஜபுதனத்தில் சுவாமிஜி இரயில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருடைய இருக்கைக்கு அருகில் இரு ஐரோப்பியர்கள் அமர்ந்திருந்தனர். இந்தியாவைச் சார்ந்த சக பயணியொருவர் தங்களுடன் சரிநிகர் சமமாகப் பயணம் செய்வதை அவ்விரு அந்நியர்களும் விரும்பவில்லை. சாது போன்று எளிய உடையில் காட்சியளித்த அவரை அவர்கள் வெறுத்தனர். அவர் கல்வியறிவில்லாதவராகத்தான் இருக்க வேண்டுமென்று அவர்கள்




ஊகித்துக்கொண்டனர். எனவே எவ்விதத் தயக்கமுமின்றி அவரைப் பற்றி மிக இழிவாகவும் ஏளனமாகவும் ஆங்கில மொழியில் பேசிக் கொண்டனர். அவர்களின் பேச்சை அவரால் புரிந்து கொள்ள முடியாது என்றும் அவர்கள் எண்ணினர் போலும்! அவர்களுடைய பேச்சையோ அல்லது ஏளனமொழிகளையோ சுவாமிஜியும் பொருட்படுத்தவில்லை. சிறிது நேரத்திற்குப் பின், இரயில் நிலையமொன்றில் வண்டி நின்றது. ஸ்டேஷன் மாஸ்டரைக் கண்ட சுவாமிஜி அவரைக் கூப்பிட்டு, தமக்கு ஒரு குவளை தண்ணீர் கொடுக்குமாறு ஆங்கிலத்தில் அவரிடம் கேட்டார். தம்முடன் பயணம் செய்யும் சாதுவான பயணி ஆங்கிலத்தில் பேசியதைக் கண்ணுற்ற ஐரோப்பியர் இருவரும் அதிர்ச்சி அடைந்தனர். அவரைப் பற்றித் தாம் பேசிக் கொண்டதையெல்லாம் சுவாமிஜி அறிந்திருப்பார் என்பதை

அவர்கள் உணர்ந்து கொண்டனர். எனவே, சுவாமிஜிடம் மன்னிப்புக் கோரும்நிமித்தமாக, அவர்கள் ஏளனமாகவும், கிண்டலாகவும் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தும் ஏன் அவர் வாளாவிருக்க வேண்டுமென வினவினர். சுவாமிஜியின் பதில் பட்டென்று இருந்தது: "நண்பர்களே! என் வாழ்நாளில் முட்டாள்களைச் சந்திப்பது இது முதல் தடவையல்ல!" தாம் அடைந்த தோல்வியால் அவ்விரு அந்நியர்களும் எரிச்சல் அடைந்தனர். அவர்களால் பதில் கூற இயலவில்லை. அவர் சாதாரண மனிதனைப் போன்ற உடலுருவத்தைப் பெற்றிருந்திருப்பின், அவரைத் தாக்கி அவரை ஊறு செய்ய துணிந்திருக்கக் கூடும். ஆனால் அவருடைய உடற்கட்டினைக் கண்ட அவர்கள், அவருடைய சூடான பதிலை ஏற்றுக் கொண்டு வாளாவிருப்பதே விவேகம் என்று கருதினர்.

## கடவுள் என்றால் என்ன?

சுவாமி விவேகானந்தர் சென்னை மாநகரில் இருந்த போது, சென்னை கிறிஸ்தவக் கல்லூரியைச் சார்ந்த வி.சுப்ரமணியம் என்னும் மாணவரொருவர் தம் நண்பர்கள் சிலருடன் அவரைக் காணச் சென்றார். சுவாமிஜியை மடக்கிவிட வேண்டுமென்றும், அவரைக் கிண்டல் செய்யவேண்டுமெனவும் அவர்கள் விரும்பினர். "ஐயன்மீர்! கடவுள் என்றால் என்ன?" என்று அவர்களில் ஒருவர் அவரைக் கேட்டார். ஒரு கணம் சுவாமிஜி அமைதியாக இருந்தார். அவர்களின் குறும்புத்தனத் திட்டத்தை அவர் ஊகித்து உணர்ந்து கொண்டார்.

வந்திருந்தவர்களில் வயது குறைந்தவரான இளைஞனை உற்று நோக்கி திடீரென "தம்பி! சக்தி என்றால் என்ன?" என்று விவேகானந்தர் கேட்டார். அதற்கு அந்த இளைஞன் ஏனோ தானோவென்று ஒருவாராக பதில் கூறினான். ஆனால் அவன் பதிலில் காணப்பட்ட பிழையை சுவாமிஜி சுட்டிக் காட்டினார். அதன் விளைவாக, அந்தப் பையன் குழப்பமுற்றான். தம் நண்பனுக்கு உதவுவான் வேண்டி மற்ற பையன்களும் தத்தம் பதில்களைக் கூறினர். சுவாமிஜி அவர்கள் அனைவரையும் தம் குறுக்குக் கேள்விக்

கணைகளால் திக்கு முக்காடச் செய்து விட்டார். அனைவரும் வாயடைத்துப் போன பின்னர் சுவாமிஜி கூறினார்: "தம்பிகளே! சக்தி என்கிற சாதாரண சொல்லுக்கே உங்களால் விளக்கம் கூற முடியவில்லை. மேலும் சக்தியை நீங்கள் ஒவ்வொருவரும் பயன்படுத்திவேறு வருகிறீர்கள்". பின்னர் கடவுளைப் பற்றியும், சக்தியைப் பற்றியும் அவர், அவர்களுக்கு மிக்க தெளிவான கருத்துக்களால் எடுத்தியம்பினார். வந்திருந்த இளைஞர்கள– னைவரும் வியப்பாக அவர் கூறுவதைக் கேட்டுக் கொண்டனர். யாரிடம் கிண்டல் பேசி எள்ளி நகையாட வந்தார்களோ, அவரையே அவர்கள் தங்கள் ஆசானாக ஏற்றுக் கொண்டனர்.

## சாதி, வகுப்புக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தவர்

பிருந்தாவனத்திற்குச் செல்லும் வழியில் சுவாமிஜி செருப்பு தைக்கும் சக்கிலியன் ஒருவனை சந்தித்தார். அவன் வீட்டில் தமக்கு



உணவளிக்க இயலுமா என்று கேட்டார். சக்கிலி தயங்கினார். ஆனால் சுவாமிஜி வற்புறுத்தி அவன் வீட்டில் உணவருந்தினார். இறைவன் முன்னர் அனைவரும் சமமே என்னும் கருத்தை இதன் மூலம் உணர வைத்தார் சுவாமிஜி. இதனைப் போன்றே பிறிதொரு முறை தாம் புகைக்கும் ஹுக்காவையே பயன்படுத்துமாறு ஹரிஜன சகோதரரிடம் கேட்டுக் கொண்டார். வேறொரு இடத்தில் தீண்டத்தகாதவர் ஒருவர் வீட்டில் அவர் தண்ணீர் வாங்கிப் பருகினார். ஆள்வார் சமஸ்தானத்தில், ஒரு சில முஸ்லீம் பக்தர்களுடன் உணவு உட்கொண்டார். சுவாமிஜி தூய்மையான உள்ளம் படைத்தவர். சாதி, சமயம் போன்ற குறுகிய சிந்தனைகளிலிருந்து அவர் முழுவதும் விடுபட்டிருந்தார். சர்வதேச சகோதரத்துவத்திலும், அனைவரும் சரிநிகர் சமம் என்னும் கொள்கையிலும் அவர் முழு நம்பிக்கை கொண்டிருந்தார்.

## அத்தியாயம் ஐந்து


### பாரதத்தின் நிலையும், சுவாமிஜியின் தீர்க்கமான முடிவும்

சுவாமிஜி பரிவிராஜராகப் பாரதத் திருநாட்டை வலம் வந்த போது சந்தித்த மக்கள் அனைவரிலும், ஏழை எளிய மக்கள் தாம் அவர் தம் நெஞ்சினைப் பெரிதும் நெகிழச் செய்தனர். அவர்களை 'தரித்திர நாராயணர்கள்' என்றே அவர் அழைத்தார். அவர்களின் துயரம் நிறைந்த நிலை அவர் உள்ளத்தை உருக்கியது. அவர்களுடைய இரங்கத் தக்க வாழ்க்கைத் தரத்தைக் கண்டு அவர் கண்ணீர் வடித்தார். தம் தாய்நாட்டு மக்களைப் பற்றிய அறிவினை ஆழமாகப் பெற்றிருந்தமையால் அவர்கள் மீது அன்பும் கவலையும் மிகுந்தன. தேசபக்தித் தீச்சுடர் அவருள் சுடர்விட்டு எரிந்தது. தம் தாய்நாடு, அதன் மக்கள், அதன் பண்பாட்டுப் பாரம்பர்யம் ஆகியவற்றை நன்கறிந்து உணர்ந்திருந்த அவர், பின்னர் தம்மையே 'பாரதத்தின் குறுவடிவம்' எனக் கூறிக் கொண்டார். பாரதத் திருநாட்டின் மக்கள் விழித்து எழுந்திடல் வேண்டும் என்பதை அவர் தெளிவாகக் கண்டு கொண்டார். அவர்கள் மாளாத் தூக்கத்தில் சிக்குண்டு இருப்பதையும் அவர் தெரிந்து கொண்டார். அவர்கள் ஏன் அப்படி

இருக்க வேண்டும்? பல நூற்றாண்டுகள் அந்நிய ஆட்சியில் நம் நாடு அடிமைப்பட்டுக் கிடந்ததன் விளைவாக, பாரதியர்கள் அடிமைகளுக்கான இயல்பினைக் கொண்டிருந்தனர். தம் புகழ்மிக்கப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை அவர்கள் மறந்துவிட்டிருந்தனர். ஏழை எளியோரும், பாமரர்களும் தம் தலைவிதியென்று அனைத்தையும் சகித்துக் கொண்டு வாழ்ந்தனர். எனவே, பாரதத் திருநாட்டில் மறுமலர்ச்சி ஒன்று தேவைப்படுகின்றதென்பதை சுவாமி விவேகானந்தர் தெற்றென உணர்ந்தார். பொருளாதார வளம் பெருக, பாரதம் மேலை நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டிவரும் என்பதை அவர் ஊகித்துணர்ந்தார். அதே சமயம், மேலைநாடுகளுக்கு ஆன்மீக உணர்வு தேவைப்படுகிறதென்பதையும் அந்த அருட்செல்வத்தை வாரி வழங்கும் ஆற்றல் பாரத நாட்டிடம் தான் உள்ளது என்பதையும் அவர் மிக நன்றாக அறிந்திருந்தார்.

## கன்னியாகுமரியில் கடும் தவம்

1892 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் சுவாமி விவேகானந்தர் கன்னியாகுமரியை வந்தடைந்தார். நினை–



விற்கெட்டா காலந்தொட்டு முனிபுங்கவர்களாலும், துறவியராலும் புனிதமடைந்த, விரிந்து பரந்துள்ள நம் பாரதத் திருநாட்டின் தென் கோடி முனைக்குத் தாம் வந்தது குறித்து அவர் பெரும் மகிழ்வு கொண்டார். புகழ்பெற்ற கன்னியாகுமரி அம்மன் ஆலயத்திற்குச் சென்றார். பக்தி நிறைந்த நெஞ்சுடன், அம்மனை விழுந்து தரிசித்தார். அதன் பின்னர், கடலோரத்திற்குச் சென்று கடலின் சிறிது தொலைவில் காட்சியளித்த புனிதப் பாறையைக் கண்ணுற்றார். அப்பாறையின் மீது ஒற்றைக்காலில் நின்று பார்வதி தேவி 'தவம்' செய்தமையால் புனிதம் பெற்றதாகக் கருதப்பட்டது அப்பாறை. சுவாமிஜி உணர்ச்சி பொங்கிய மனநிலையில் இருந்தார். அப்பாறைக்குச் செல்ல வேண்டுமென அவர் விரும்பினார். பாறைக்கு அவரைப் படகில் ஏற்றிச் செல்லும் படகோட்டிக்குக் கொடுக்க அவரிடம் பணமில்லை. சுறாமீன்கள் நிறைந்த கொந்தளிக்கும் கடலை நீந்தியே கடந்து அவர் பாறையை அடைந்தார். அல்லும் பகலும் பாரத நாட்டினைப்பற்றி சிந்தித்தவராய் அதன் பிரச்சினைகளையும் அவற்றிற்கான பரிகாரங்களையும் காண வேண்டும் என்ற சிந்தை கனிந்தவராய் மூன்று நாட்கள் அப்பாறையிலேயே இருந்தார்.

## வெளிநாடு செல்லும் வெற்றிப் பயணம்

சிகாகோவில் நடைபெறவிருந்த சமயங்களின் பாராளுமன்றத்தில் ஹிந்து சமயத்தின் பிரதிநிதியாக சுவாமி விவேகானந்தர் கலந்து கொள்ள வேண்டும் என்னும் கருத்தினை அவருடைய ஆதரவாளர்கள் பலர் ஏற்கனவே கூறியிருந்தனர். மைசூர் மகாராஜா, இராமநாதபுரம் சேதுபதி மகாராஜா, போர்-பந்தரின் பிரதம மந்திரி ஆகியோர், சுவாமிஜி மேலை நாட்டிற்கு விஜயம் செய்ய வேண்டுமென விழைந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாம். அமெரிக்காவிற்கு விஜயம் செய்ய வேண்டும் என்ற முடிவினை கன்னியாகுமரியில் தான் சுவாமிஜி மேற்கொண்டார். எண்ணற்ற நண்பர்களும், பக்தர்களும் அவருக்குப் பொருளுதவி செய்ய ஓடோடி வந்தனர். சென்னை மாநகரைச் சார்ந்த தமிழறிஞர் அழகிய சிங்கப்பெருமாள் என்பார் அவர்களில் ஒருவர். நிதி திரட்டும் பணியில் தீவிரமாக பங்கேற்றவர்களுள் அவர்


குறிப்பிடத்தக்கவர். சுவாமிஜியின் பயணத்திற்காகப் பெருந்தொகை வசூல் செய்யப்பட்டது. ஆனால் உண்மையான சந்நியாசியானபடியால் அவர் அமெரிக்கப் பயணத்திற்காகும் செலவுக்கான தொகையை மட்டுமே ஏற்றுக் கொண்டார். வசூலிக்கப்பட்ட பெருநிதியில் தேவைக்கதிகமான பணத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். 1893 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் நாள் பெனின்சுலார் என்னும் பெயர் கொண்ட கப்பலில் சுவாமிஜி கடற்பயணத்தை மேற்கொண்டார். பிரிட்டிஷ் கொலம்பியாவில் இருந்த வான்குவார் வரை கப்பலில் சென்றார். அங்கிருந்து சுவாமிஜி இரயிலில் பயணம் செய்து சிகாகோ சென்றடைந்தார். 1893 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் நாள் அவர் சிகாகோ சேர்ந்தார். சுவாமிஜியின் விஜயம் மாபெரும் வெற்றி பெற்றது. பாரத நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் பெருமையை மேலைநாடுகளெல்லாம் அறியச் செய்த பெருமை இவரையே சாரும். மெய்மறந்த நிலையில் வேதங்களில் பொதிந்துள்ள பேருண்மைகளை மேலைநாட்டு மக்களுக்கு அவர் பறைசாற்றினார்.

## அத்தியாயம் ஆறு

### மேலை நாடுகளில் வேதாந்த முழக்கம்

சுவாமி விவேகானந்தர் புதிய உலகமான அமெரிக்காவை புயலெனத் தாக்கினார். ஞானம், ஆற்றல் மற்றும் பெருந்தன்மையின் உருவகமாக அவர் உருமாறிவிட்டார். அவர் பேருரை ஆற்றியபோதெல்லாம் மக்கள் திரளாகத் திரண்டு வந்து கேட்டு செவிமடுத்தனர். அவர்களை அவர் தம்பால் ஈர்த்துக் கொண்டார்.

1893 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் நாள் திங்கட்கிழமை சமயங்களின் பாராளுமன்றக் கூட்டம் கூடியது. பல நாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்றனர். கூட்ட நிகழ்ச்சிகள் ஆரவாரத்துடன் தொடங்கின. பிரதிநிதிகள் ஒவ்வொருவராக உரையாற்றினர். சுவாமிஜியின் முறையும் வந்தது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட எந்த உரையையும் அவர் எடுத்துச் சென்றிருக்கவில்லை. உரையாற்ற வேண்டிய தருணம் வந்த போது,




அவர் கலைமகளையும் தம் குருநாதர் ஸ்ரீ இராமகிருஷ்ணரையும் அடக்கமாக வழிபட்டுவிட்டு, "அமெரிக்க நாட்டு சகோதர சகோதரிகளே!" என்று தம் உரையைத் தொடங்கினார். அவ்வாறு அவர் கூறிய தொடக்கச் சொற்களே மின் அதிர்வினால் தாக்கப்பட்டது போன்று கிளர்ச்சியூட்டியதன்றோ! அந் நிகழ்ச்சி பின்வருமாறு வருணிக்கப்பட்டுள்ளது: அவையில் இருந்தோர் அனைவரும் பெரும் உள்ளக் கிளர்ச்சிக்கு ஆளானார்கள். ஆயிரமாயிரவர் தத்தம் இருக்கையை விட்டு எழுந்து நின்று காதுகள் செவிடுபடும்படியாக மீண்டும் மீண்டும் கரவொலி எழுப்பினர். திரண்டிருந்த பெருங்கூட்டத்தினரின் மகிழ்ச்சி ஆரவாரம் இரண்டு நிமிட நேரம் நீடித்தது. ஏனைய சொற்பொழிவாளர்கள் அனைவரும் 'சீமாட்டிகளே! சீமான்களே!' என்று தமது உரையைத் தொடங்கினர். சுவாமிஜி மட்டும் தமது உரையை 'அமெரிக்க நாட்டு சகோதர சகோதரிகளே!' என்று தொடங்கியது திடீர் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. இச்சொற்கள் அவருடைய உள்ளத்தின் அடி ஆழத்திலிருந்து வெளிப்பட்டவை. உலக சகோதரத்துவம் என்னும் இலட்சியத்தை அவை கட்டியம் கூறி வெளிப்படுத்தின.

மேலைநாட்டு மக்களின் உள்ளத்தில் சுவாமி விவேகானந்தர் மந்திரத்தில் கட்டுண்டவர்களைப் போல் உருவாக்கிய செல்வாக்கினை சொற்களால் வருணிக்க இயலுமோ! சொல்லுதற்கரிய ஆற்றல்மிக்க சிந்தனைச் சிற்பிகளும், அறிஞர் பெருமக்களும் அவர் தம் பெருமையை ஏற்றுக் கொண்டனர். "உங்களுடைய தகுதிச் சான்றிதழ்களைக் கேட்பது கதிரவனைப் பார்த்து பிரகாசிப்பதற்கான அனுமதி இருக்கிறதா?" என்று கேட்பதனைப் போன்றது என சுவாமிஜி அவர்களிடம் ஜே. எச். ரைட் என்ற புலமைமிக்கப் பேராசிரியர் கூறினார். ஆயிரமாயிரவர் அவருடைய நண்பர்களாகவும், அபிமானிகளாகவும், பக்தர்களாகவும் ஆகிவிட்டனர். சுவாமிஜியின் உரைகளை முதலிடம் வகிக்கும் அனைத்து செய்தித் தாள்களும் பிரசுரித்ததுடன் அவரை வெகுவாக புகழ்ந்தும் பாராட்டியும் எழுதின். மக்கள் அனைவராலும் சிறந்தவை என்று போற்றப்பட்ட மாறுதலை விரும்பாத மாநகர் செய்தித்தாள்கள் எல்லாம் அவரை தீர்க்கதரிசி என்றும் ஞானி என்றும் பறைசாற்றின. நியூயார்க் ஹெரால்டு என்னும் தினசரி அவரைப் பற்றி பின்வரும் சொற்களால் விவரித்தது:

" சமயங்களின் பாராளுமன்றக் கூட்டத்தின் நடுநாயகமாய் திகழ்ந்தவர் அவர்தான் என்பதை ஐயமறக் கூறலாம். அவருடைய உரையைக் கேட்ட பிறகு, அத்தகைய ஞான பூமிக்குக் கிறிஸ்தவப் பாதிரிகளை அனுப்புவது முட்டாள்தனமாகும் என்று நாங்கள் உணருகிறோம்."

பின்னர் அவர் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றார். அமெரிக்காவிலும் சரி அல்லது இங்கிலாந்து, பிரான்ஸ் அல்லது ஜெர்மனி போன்ற நாடுகளிலும் சரி சென்றவிடமெல்லாம் அவரைப் பேரார்வத்துடன் வரவேற்றார்கள். சுவாமி விவேகானந்தர் உலகப் பெருமானாக உயர்ந்து விட்டார். சூறாவளித் துறவியென்றும் பாரதத் திருநாட்டின் தேசபக்தஞானி என்றும் அவர் புகழப் பெற்றார்.

## பாரத மக்களுக்கு அவர் வடித்த கண்ணீர்

சுவாமிஜியின் சொற்பொழிவுகள் எல்லா இடங்களிலும் மக்களை மெய்சிலிர்க்க வைத்ததுடன் பாடங்கற்பிப்பவையாயும் அமைந்தன. மேலைநாட்டு செல்வந்தர்களும் மேல்குடி மக்களும் அவருக்கு அழைப்புக்கு மேல் அழைப்பு விடுத்தனர். சென்றவிடமெல்லாம், அவரை மரியாதையுடன் வரவேற்று உபசரித்தார்கள். அன்புடனும் ஆதரவுடனும் அவர் பராமரிக்கப்பட்டார். எனினும் அவர் பெற்ற சலுகைகளும் ஆடம்பரங்களும் அவரை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தவில்லை. மாறாக அத்தகைய தருணங்களில் தம் தாய்நாட்டின் இலட்சோப லட்சம் ஏழை எளிய மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் சிந்தித்து சிந்தை கலங்கினார். அத்தகையசிந்தனைகள் உள்ளத்தில் எழுந்தபோதெல்லாம் அவர் மகிழ்ச்சி அற்றவராய், அமைதியிழந்தவராய் பரிதவித்தார். தூங்கவும் ஓய்வெடுத்துக் கொள்ளவும் ஒதுக்கப்பட்ட பஞ்சு மெத்தைக் கட்டிலை விட்டு விட்டு, கட்டாந்தரையில் கிடந்து படுத்து உறங்குவதையே அவர் விரும்பினார். தம் நாட்டு மக்களின்பால் இத்தகைய கருணையுணர்வினைக் கொண்டிருந்தார் அவர். மக்களுக்காக அவர்தம் இதயத்தில் உதிரம் கசிந்தது. அவர்களுக்காக அவர் கண்ணீர் சொரிந்தார்.

## பாராளுமன்றத்தின் நிறைவுக் கூட்டம்

சமயங்களின் பாராளுமன்றத்தின் நிறைவு விழா 1893 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ஆம் நாள் நடைபெற்றது. அன்று சுவாமிஜி ஆற்றிய உரையின் இறுதி வரிகள் என்றென்றும் நினைவு கூறத் தக்கவையாம்:

"சமயங்களின் பாராளுமன்றம் இவ்வுலகிற்கு எதையேனும் உணர்த்தியிருக்க கூடுமானால் அது இதுதான் – புனிதத்தன்மை, தூய்மை, பெருந்தன்மை ஆகியவை எந்தவொரு குறிப்பிட்ட மத அமைப்பிற்கு மட்டுமே உரித்தான சிறப்பு குணமல்ல. எல்லாச் சமய நெறிகளும் மிகச் சிறந்த, பண்புகளைக் கொண்ட ஆண்களையும்

பெண்களையும் உருவாக்கிக் கொடுத்துள்ளன. இத்தகைய சான்றினைக் கண்டறிந்த பின், எவரேனும் தம் சமயம் மட்டுமே நிலைத்து நிற்க வேண்டுமென்றும், ஏனைய சமயங்கள் அழியவேண்டுமெனவும் கனவு காண்பாரேயாயின் அவருக்கு எனது உள்ளார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெகுவிரைவில் ஒவ்வொரு சமயத்தின் கொடியிலும் எதிர்ப்பினை விடுத்து 'உதவிட முன் வருக! பொருதிட வேண்டாம்!' "வேண்டுவது முழு இணக்கமேயன்றி அழிவன்று", "இசைவும் அமைதியுமே தேவைப்படுவது–கருத்து வேறுபாடன்று – போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட வேண்டுமென்பதை அவருக்கு நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்". பக்குவமடைந்ததோர் உயர்ந்த ஆத்மாவான சுவாமிஜியின் வாயிலாக, நல்லிணக்கத்தினையும் கூட்டுறவினையும் வலியுறுத்தும் வகையில் வெளிப்பட்ட இவ்வரிய செய்தியினைச் செவி மடுத்த உலகத் தலைவர்கள் உள்ளம் உருகி நெகிழ்ந்து மகிழ்ந்தனர்.

## அத்தியாயம் ஏழு

### நானிலம் போற்றும் நன்மதிப்பு

சமயங்களின் பாராளுமன்றத்தில் தந்நிகரில்லாத் தன்மையுடன் பங்கேற்று வெற்றிவாகை சூடி மேலைநாடுகளில் இருந்து திரும்பிய சுவாமிஜி அவர்களுக்குச் சென்றவிடமெல்லாம் வீர வரவேற்பு கொடுக்கப்பட்டது. பெருமிதத்துடனும் உற்சாகத்துடனும் மக்கள் அவரைத் தத்தம் ஊர்களுக்கு வர வேண்டுமென வேண்டினர். தென்னாட்டில் சுவாமிஜி பாம்பன் வழியாக இராமநாதபுரம் சென்றபோது இராமநாதபுரம் இராஜா, தமது அலுவலர்களையும் ஆயிரமாயிரம் அபிமானிகளையும் உடனழைத்துக் கொண்டு சுவாமிஜியை அரசு மரியாதைக்குரிய சாரட்டு வண்டியில் அமர்த்தி, பூட்டிய குதிரைகளை அவிழ்த்துவிட்டு தாமே அவ்வண்டியைத் தெருக்களில் இழுத்து அரசருக்குச் சொந்தமான பாம்பன் மாளிகைக்கு வந்தது சுவாமிஜியிடத்தில் அவருக்கிருந்த அன்பினையும் மரியாதையையும் சுட்டிக் காட்டும். அந்த வீரத்துறவி




கப்பலில் இருந்து தாய்நாட்டு மண்ணில் முதல் அடி எடுத்துவைத்த இடத்தில் வேறுயாருடைய அடியும் படுதல் கூடாது என்று எண்ணிய இராமநாதபுரம் இராஜா அதே கணத்தில் வெற்றித் தூண் எழுப்பினார்.

அத்தகைய வரவேற்பு ஒரு தொடக்கமாகத்தான் இருந்தது. பாரதத் திருநாட்டின் மாபெரும் தேசபக்தித் துறவியை வரவேற்க நாடு நெடுகிலும் ஒன்று திரண்டெழுந்த அருங்காட்சியே இதற்குச் சான்றாகும். பெருங்குடி மக்களும் ஏழை எளியோரும் தோளோடு தோள் இணைந்து அவரைச் சென்றவிடமெல்லாம் வரவேற்றார்கள். தெற்கே கொழும்புவிலிருந்து வடக்கே அல்மோரா வரை அவர் சென்ற வழியில் எல்லாம் தோரணங்களும், வரவேற்பு அலங்கார வளைவுகளும், ஊர்வலங்களும் அது போன்று கண்ணையும் கருத்தையும் கவரும் அலங்கார வரவேற்பும் அவருக்குக் காத்திருந்தன.

பாரத நாட்டின் மண்ணை மிதித்ததும் அதன் புழுதியை எடுத்துத் தன்மீது அவர் தூவிக் கொண்டார். தமக்கு அருமையும் புனிதமும் வாய்ந்ததாக தாய்த்திருநாட்டை அவர் கருதினார் எனில் அது மிகையாகாது. எனினும் தம் மக்களை வருத்திவாட்டிய துயரங்கள் மலிந்திருப்பதைக் கண்டு அவர் உள்ளம் கதறி அழவும் செய்ததன்றோ?

பாரத நாட்டினை மீண்டும் எழுச்சி கொள்ளச் செய்ய வேண்டுமெனில் அதற்கான தம் இலட்சியப்பணிகளை எங்கிருந்து தொடங்குவது? அத்தகைய புனர் நிர்மாணப் பணிக்கான தொண்டர்கள் எங்கிருந்து வருவார்கள்? சாதி வெறி, தீண்டாமை மற்றும் நூற்றுக்கணக்கான காலத்திற்கொவ்வாத மூட நம்பிக்கைகளும், கண்மூடிப் பழக்க வழக்கங்களும் சமூகத்தில் நிரம்பி வழிந்தன. அவற்றையெல்லாம் மாற்றிப் போக்குவதற்கு புதியதொரு கல்விமுறை நிலைநாட்டப் பெறல் வேண்டும். மாந்தருக்குள் ஏற்கனவே ஒளிந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிக்கொணர்வது தான் அத்தகைய கல்வியாகும். மனிதனுள் உறங்கியிருக்கும் தெய்வத் தன்மையை வெளிக்கொணர்ந்து பணியிலும் வழிபாட்டிலும் புதியதொரு முறையைக் கொண்டு வருவதே கல்வி. பாரதத் திருநாட்டின் கல்வி முறையில் மிகமிக அவசரத் தேவையாகப்பட்டது மனிதனை உருவாக்கி அவன் குண நலன்களை உருவாக்கி நாட்டை உருவாக்குவதே ஆகும்.

தியாக உணர்வுக்கும் தொண்டு உணர்வுக்கும் மாண்புமிக்கதோர் புதிய இடத்தைக் கொடுக்க வேண்டும். சேவை மனப்பான்மையைப் பற்றிய செய்தியை நாட்டு மக்களுக்கு மனதில் உறைக்கும்படி செய்தாக வேண்டும். அப்போதுதான் தம் நாட்டு மக்களின் அடிமை மனப்பான்மையை அடியோடு களைந்தெறிய முடியும். கொழும்புவிலிருந்து அல்மோரா வரை பயணம் செய்த போது மேற்கூறிய கருத்துக்களில் சிலவற்றையே அவர் தம் நாட்டு மக்கள் முன் வைத்தார். அவர் தம் சொற்களை செவிமடுத்த ஆயிரமாயிரவர் புத்துணர்ச்சி பெற்றனர். புதியதொரு அமைப்பினை உருவாக்கத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள அவர்கள் முன் வந்தனர். நம்

நாட்டுத் தேசியத் தலைவர்கள்—தம்மளவில் உயர்ந்து சிறந்து விளங்கியவர்கள்—சுவாமி விவேகானந்தரின் வாழ்விலும் போதனைகளிலும் உத்வேகம் பெற்றார்கள் என்றால் அது உண்மையன்றோ!

நாட்டைப் புனர் நிர்மாணம் செய்யும் பணியில் தாய்மார்களுக்குரிய பங்கினையும் சுவாமிஜி வலியுறுத்திக் கூறியதாவது: "தாய்மார்களுக்கு உரிய மரியாதையைக் கொடுக்கும் மனப்பான்மையினால்தான் உலக நாடுகள் பெருநிலை எய்தியிருக்கின்றன. தாய்மார்களைப் போற்றி மதியாத எந்தவொரு நாடும் எந்தவொரு மக்கள் சமுதாயமும் பெருநிலை பெற்றதில்லை; வருங்காலத்திலும் அப்படிப்பட்ட நாடுகள் பெருநிலை அடையப் போவதில்லை. தெய்வத்தாயின் உயிரோட்டமுள்ள நடமாடும் சின்னங்களாகத் திகழும் தாய்மார்களை மேம்படுத்தவில்லை—யென்றால், வேறு எந்த வகையிலும் நாம் முன்னேற முடியாது."

## சகோதரி நிவேதிதை

மேலை நாடுகளைச் சார்ந்த ஆயிரமாயிரவரின் உள்ளங்களை யெல்லாம் கணப்பொழுதில் சுவாமிஜி கொள்ளை கொண்டார். அவர்களில் அயர்லாந்தில் பிறந்த மார்க்கரெட் நோபில் என்னும் மாதரசி குறிப்பிடத்தக்கவர். சகோதரி நிவேதிதை என்னும் பெயராலேயே அந்த அம்மையார் பின்னர் பிரபலமடைந்தார்.

சுவாமி விவேகானந்தரின் உண்மையான மகத்துவத்தை சகோதரி நிவேதிதை முழுமையாக உணர்ந்திருந்தார். சுவாமிஜி அவர்கள் பொதுப்பணிபுரிய வாருங்கள் என்று மக்களுக்கு விடுத்த வேண்டுகோளால் பெரிதும் இந்த அம்மையார் கவரப்பட்டிருந்தார். அந்த அம்மையார் பக்கம் திரும்பி அவர் கூறியதாவது: "என்னுடைய தாய்த் திருநாட்டைச் சார்ந்த தாய்மார்களுக்கு என்னிடம் திட்டங்கள் உள்ளன. அதை நிறைவேற்றி வைப்பதில் நீங்கள் எனக்கு உறுதுணையாக இருக்கக்கூடுமென நான் நினைக்கிறேன்." அத்தகைய அழைப்பினை அவர் மனதார விரும்பி வரவேற்றார். பாரத நாட்டிற்குச் சென்று அதன் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென

அவ்வம்மையார் முடிவு செய்தார். 1898ஆம் ஆண்டு ஜனவரி மாதவாக்கில் அவர் கல்கத்தா மாநகர் வந்தடைந்தார். பாரதநாட்டு மக்களுக்குச் சேவை புரிவதே தம் தலையாய பணி என்ற விரதத்தை மேற்கொண்டார். அத்தருணத்தின் போதுதான் சுவாமிஜி அந்த அம்மையாருக்கு 'நிவேதிதை' என்னும் பெயரைச் சூட்டினார். 'அர்ப்பணிக்கப்பட்டவர்' என்பதே அச்சொல்லின் பொருள்.


சகோதரி நிவேதிதை பாரத நாட்டில் விரிவாகப் பயணம் செய்தார்; ஹிந்து சமயத் தத்துவ நூல்களை ஆழ்ந்து பயின்றார்; அவற்றைக் குறித்து விரிவாக எழுதினார். மக்களுக்கு பல்வேறு வழிகளில் சொற்பொழிவாற்றியும் தொண்டாற்றியும் மகிழ்ந்தார். பெண் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் ஒன்றை



அவர் நிலை நாட்டினார். அப்பள்ளிக்கு தேவையான பொருள்களையும் அவரே திரட்டினார். பள்ளிகளுக்கான நூல்களை எழுதியும் பொருள் திரட்டினார். பாரதத் தாய்மார்கள் கல்வி கற்றவர்களாக வேண்டுமென அவர்களை ஆர்வத்துடன் வேண்டினார். அவர்கள் வல்லவர்களாய் தம் கால்களிலேயே நிற்பவர்களாய் திகழ வேண்டியும் அவர் விழைந்தார். பாரதத் திருநாடு பண்டைய பெருமையையும், புகழையும் மீண்டும் பெறும் பொருட்டு தாய்மார்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமென அவர் உண்மையுடன் உழைத்தார்.

## மக்கள் தொண்டில் மகத்தான ஈடுபாடு

சுவாமி விவேகானந்தர் ஒரு ஞானி; சந்நியாசி. மேலும் அவர் சிறந்த கர்மயோகியாகவும் விளங்கினார். ஒரு சமயம் கல்கத்தா மாநகரில் பிளேக் என்னும் கொள்ளை நோய் கொடுமையாக பரவியது. சுவாமி விவேகானந்தர் தம் சகோதரத் துறவியர்களைக் கொண்ட தொண்டர் படையொன்றை உடனே திரட்டினார். அப்பயங்கரக் கொள்ளை நோய்க்கு ஆளான நோயாளிகளுக்குத் தொண்டு புரிந்தார். சகோதரி நிவேதிதை தொண்டர் குழாத்தின் பொறுப்பாளராய் நியமிக்கப் பெற்றார். நோயுற்றவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அந்த அம்மையார் ஓய்வு ஒழிச்சலின்றி அரும்பாடு பட்டார். அவசியம் ஏற்பட்ட போது அவர் உடல் உழைப்பினையும் நல்கத் தயங்கவேயில்லை. ஊருக்கு உபதேசம் செய்வதை விட செய்கையில் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டுமென்ற முதுரைக் கிணங்க ஒரு முறை அந்த அம்மையாரே துடைப்பத்தை கையிலேந்தி அசுத்தமான சந்து ஒன்றினை பெருக்கத் தொடங்கினார். அவருடைய உற்சாகத்தையும் செயலாற்றும் திறனையும் கண்ணுற்ற பலரும் அவரோடு இணைந்து செயலாற்றினார்கள்.




1867 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ஆம் நாள் சகோதரி நிவேதிதை பிறந்தார். 1911 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ஆம்

நாள் அவர் உயிர் நீத்தார். மேன்மைதரும் பயனான வாழ்வு வாழ்ந்தார். "சகோதரி நிவேதிதை பாரத நாட்டை நேசித்தார்; தமக்கென வாழாது தம்மையே பாரதநாட்டிற்கு அர்ப்பணித்துக் கொண்டார். பாரதம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது" என்று கவிஞர் இரவீந்திரநாத தாகூர் அவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

## இராமகிருஷ்ண மடம் நிறுவப்பட்டல்

குவலயத்தைச் சூறாவளியென சுற்றிய பின் சுவாமி விவேகானந்தர் பாரதம் திரும்பினார். மேலை நாடுகளுக்கு மீண்டும் ஒரு முறை பயணமானார். ஆனால் அவர் தம் இரண்டாம் பயணம் நிறைவேறுவதற்கு முன்னர், இராமகிருஷ்ண துறவியர் மடத்தை நிறுவும் தலையாய பணியினை மேற்கொண்டார். 1897 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாளன்று சுவாமிஜி பாரதத்தில் இருந்த போது, தம் சகோதரத் துறவிகளையும் ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சரின் சீடர்களான இல்லறவாசிகளையும் வரவழைத்துக் கூட்டம் ஒன்றை நடத்தினார். ஞானயோகம், பக்தியோகம், மற்றும் கர்மயோகம் ஆகியவை வலியுறுத்தும் கோட்பாடுகளின் அடிப்படையில் துறவியர் மடம் ஒன்றை நிறுவுவதென அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அறிவு, வழிபாடு, தொண்டு ஆகியவை முறையே அம்மூன்று யோகங்களின் குறிக்கோள்களாகும். இக்குறிக்கோளை கலையுணர்வுடன் புலப்படுத்தும் இலச்சினையையும் சுவாமி விவேகானந்தரே இராமகிருஷ்ணமடத்திற்கு உருவாக்கிக் கொடுத்தார். இப்படியாக சுவாமிஜியின் முயற்சியால் ஸ்ரீ இராமகிருஷ்ணமடமும், மிஷனும் தோன்றின. 1898 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் நாள் பேலூர் மடத்தில் இராமகிருஷ்ணர் விட்டுச் சென்ற சின்னங்களும் திருவுருவப்படமும் தாங்கிய ஆலயம் ஒன்று நிறுவப்பட்டது. இராமகிருஷ்ண மடத்திற்கும் மிஷனுக்கும் உலகத் தலைமைக் கேந்திரமாய் பேலூர் மடம் செயல்படுகிறது. இன்று உலகம் முழுவதிலும் ஏறத்தாழ நூறு கேந்திரங்கள் பணியாற்றி வருகின்றன. அவற்றின் மேன்மைமிக்க உள்ளார்ந்த தொண்டுகளின் பயனாகஇன்று அவை உலகப் புகழ் பெற்று விளங்குகின்றன. சீரிய



முறையில் பயிற்றுவிக்கப் பெற்று கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் தன்னலம் மறுத்தத் துறவிகள் பல்வேறு கேந்திரங்களில் ஸ்ரீ இராமகிருஷ்ணமடம் மற்றும் மிஷன் ஆகியவற்றின் பணிகளை ஏற்றெடுத்து வழிகாட்டி வருகின்றனர். இங்ஙனம், வேதாந்த உண்மைகள் உலகெங்கும் பரவி, மன்பதைக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று சுவாமிஜி கண்ட கனவை, அவர் வாழ்வை விட்டு நீங்கும் முன்னரே இராமகிருஷ்ண இயக்கம் எல்லாத் துறைகளிலும் செயலாற்றத் தொடங்கிவிட்டது. 'ஆத்மனோ மோட்சார்த்தம், ஜகதித்தயச்ச' என்பது அதற்கு அவர் கொடுத்த உணர்ச்சிமிக்க இலட்சியமாகும்:– 'ஒருவர் தம் சொந்த விடுதலைக்கும் உலக நலனுக்கும்' என்பது அந்த இலட்சியத்தின் பொருள்.

## சாரதா மடம்

சுவாமி விவேகானந்தர் ஏற்கனவே கருத்திற் கொண்டபடி, பெண்களுக்கான தனியான மடாலய முறை அமைப்பு 1953 ஆம் ஆண்டு புனித அன்னையார் ஸ்ரீ சாரதா தேவியாரின் பிறந்த நாள் நூற்றாண்டின் போது நிறுவப்பட்டது. **சாரதா** மடம் மற்றும்

**இராமகிருஷ்ண சாரதா மிஷன்** என்னும் பெயரால், கல்கத்தா மாநகரிலிருக்கும் தட்சிணேசுவரமே இவ்வமைப்பின் கேந்திரமாகும். இந்த அமைப்பின் கீழ் 13 கேந்திரங்கள் உள்ளன. ஆஸ்திரேலியாவில் இருக்கும் சிட்னி நகரில் இதன் கிளையொன்று இயங்கி வருகிறது. இவ்வமைப்பு கல்வி, மக்கள் தொண்டு, பண்பாடு, ஆன்மீகம் போன்ற பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகின்றது.



சுவாமி விவேகானந்தர் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளே வாழ்ந்தார். 1902 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4ஆம் நாள் அவர் மகாசமாதி அடைந்தார். ஆனால் அவர் தொடங்கி வைத்த பணிகள் சுவடு விட்டு பல்கிப் பெருகி முன்னேறியுள்ளன. அவை மேன்மேலும் தொடர்ந்து செழித்து வளர்ந்து வருகின்றன. அவர் தம்

உண்மைப்பெருமைக்கும், இடையறாது தொண்டாற்றும் பேரார்வத்திற்கும் அவை அடையாளமாய் நிற்கின்றன. அவருடைய ஆசான் 'குரு மகராஜ்' ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சரின் குன்றாத பெருமையினையும் இஃது உணர்த்துகிறது.

## விவேகானந்த கேந்திரம்

ஆன்மீகம், தொண்டு ஆகியவற்றோடு மனிதனை உருவாக்கி, அவனுடைய குணநலன்களைச் செம்மைப் படுத்தி, நாட்டினை புனர்நிர்மாணம் செய்யும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் வலியுறுத்தினார். சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கினை அறிந்து தெளிந்த மெய்யன்பர்கள் சிலர் அவர்தம் பணியினை மேற்கொள்ளும் நோக்குடன் உருவாக்கப்பட்டதே விவேகானந்த கேந்திரம். கன்னியாக்குமரிக்கருகில் கடல் நடுவே உள்ள பாறையில் உலக அதிசயங்களில் ஒன்றான விவேகானந்த நினைவாலயத்தை நிறுவும் மாபெரும் பணியினைச் செய்து முடித்த விவேகானந்த கேந்திரம், நாட்டில் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த கல்வி கற்ற, ஊக்கமும் உணர்ச்சியுமுள்ள இளைஞர்களைத் திரட்டி அவர்களுக்கு உரிய



பயிற்சி அளித்து ஏழை எளியோர்க்கும், தேவைப்படும் ஏனையோர்க்கும் தொண்டுகளை மேற்கொள்ளும் பல ஜீவன் விரதிகளை (ஆயுட்கால தொண்டர்களை) அர்ப்பணிக்கச் செய்துள்ளது. விவேகானந்த கேந்திரம் பல ஆண்டுகளாக பல்வேறு துறைகளைச் சார்ந்த தொண்டுகளில் முழுமூச்சுடன் இறங்கிச் செயலாற்றி வருகின்றது. பொதுப்பணிக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்ட தொண்டர்கள் சுவாமிஜியின் இலட்சியங்களை நாடு நெடுகிலும் பறைசாற்றி வருகிறார்கள். நகரங்கள், கிராமங்கள், மலையுச்சிகள், பள்ளத்தாக்குகள் என எல்லாப் பகுதிகளுக்கும் சென்று ஆதிவாசிகள் மற்றும் அரிஜனங்கள் போன்ற சமூகத்தில் தாழ்வுற்று வாழும் மக்களைக் கைத்தூக்கி விடும் பணிகளை மேற்கொண்டு சகோதரத்துவம், அன்பு, தொண்டு, கல்வி, தன்னிறைவு ஆகிய குணப் பண்புகளால் இணைத்து நறுமணம் வீசும் ஆரமாகத் தொடுத்து அரும்பணியாற்றி வருகிறார்கள் விவேகானந்த கேந்திரத் தொண்டர்கள்.

கல்வி, மருத்துவ உதவி, ஒருங்கிணைந்த கிராமப்புறவளர்ச்சி, யோகம், யோகப் பயிற்சி மூலம் நோய் நீக்கல், நூல்களைப் பதிப்பித்தல் போன்ற துறைகளில் செயலாற்றி நாட்டிற்குத் தொண்டு செய்யும் அரும்பணியில் இன்று விவேகானந்த கேந்திரம் முனைந்துள்ளது.

சுவாமி விவேகானந்தர் போன்ற பெருமக்களின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடந்தான் என்ன? அமெரிக்கக் கவிஞர் எச்.டபிள்யூ. லாங்ஃபெல்லோ என்பாரின் புகழ்மிக்க வரிகளின் மூலம் மேற்கூறிய வினாவிற்கு விடை கூறலாம்.

"நாமும் நம் வாழ்க்கையினை உயர்ந்ததாகச் செய்து கொள்ள முடியும் என்பதை நமக்கு நினைவுறுத்துவது மேன்மக்கள் நடத்திய வாழ்க்கை. காலமென்னும் மணலில் அவர்கள் விட்டுச் சென்ற அடிச்சுவடுகளோ நாமும் அங்ஙனம் நமது காலடித் தடங்களை விட்டுச் செல்ல வேண்டுமென அறிவுறுத்தும்."